இதழ் 181

# மண்

ஜேர்மனி / 2017
தை - மாசி / January - February



நூறாவது பிறந்தநாள்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்
மக்கள்திலகம் எம் ஜி இராமச்சந்திரன்
மலர்வு **17.01.1917** - உதிர்வு **24.12.1987**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மனி ஒபகௌசன் நகரில் வாழும் திரு,திருமதி மகாலிங்கம் - டொறின் குடும்பத்தவரின் நிதி உதவியால் கிளிநொச்சி - ஜெயபுரம் ரூத் மி\னில் 25.12.2016 அன்று நத்தார் விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

**கொலைக்களமாக மாறும் யாழ்ப்பாணம்.......அசாதாரண சூழலின் உச்சம்- கருவோடு சிதைக்கப்பட்ட பெண்.........**

யாழ்ப்பாணமும், வடக்கு மாகாணமும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை அடிக்கடி ஊடகங்களும், சமூக ஆர்வலர்களும், அரசியல்வாதிகளும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இது தொடர்பாக சரியான சட்ட ஒழுங்குகளை நிலைநாட்டுவதற்கு காவல்த் துறையினரும், அரசாங்கமும் தயாரில்லாமல் இருப்பது வேதனையானது.

விடுதலைப் புலிகளுடான யுத்தம் முடிவடைந்த நிலையில் வடமாகாணம் முழுவதும் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.5 குடிமகனுக்கு ஒரு இராணுவத்தினர் இருப்பதாக அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

மேலதிகமாக காவல்த்துறையினரும் இருக்கின்றார்கள். ஆனால், எவ்வாறு கொலை கொள்ளைச் சம்பவங்கள் நிகழ்கின்றன என்பதற்கு சரியான பதிலை காவல்த்துறையினர் வெளியிடவில்லை.

இவை மட்டுமல்லாமல் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, போதைவஸ்துப்பாவனை, போன்ற தீய நடவடிக்கைகள் அதிகரித்து வருவதுடன் சட்டம் ஒழுங்கு மீறப்படுவதும் சர்வசாதாரணமாகியுள்ளது. இதனால் ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் பாரிய சமூகச்சீர்கேடுகளை எதிர்கொண்டுவருவது தேனைக்குரிய விடையமாகும்.

இதே மாதிரி வடக்கில் போதிளவு கேரள கஞ்சாவும் தடையின்றிக் கிடைக்கின்றது. இவை எல்லாம் எவ்வாறு? எங்கிருந்து? யாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்று பாதுகாப்பை உறுதிப்படுத்தும் காவல்த்துறையினர் சரியாக ஆராயவில்லை.
ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பையும், அவர்களுக்கான ஆயுத விநியோகங்களையும் தடுத்து நிறுத்தி புலிகளை நாட்டில் இருந்து முற்றாக அழிக்க முடியும் எனில், காவல்த்துறையினரால் ஏன் வடக்கில் நிகழும் அசம்பாவிதங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். ஊர்காவற்துறை- சுருவில் பகுதியில் கடந்த 24.01.2017 அன்று இளம் கர்ப்பிணி தாய் ஒருவர் விசமிகளால் கடுமையாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு கண்காணிப்பில் இருப்பதாகவும், இராணுவத்தினரும் காவல்த்துறையினரும் பாதுகாப்பை சரியாகச் செய்துவருவதாக சொல்லும் அரசாங்கம் இது போன்ற அசம்பாவிதங்கள் நடப்பதை ஏன் தடுத்து நிறுத்த முடியாமல் போகின்றது என்பதே தற்போதுள்ள கேள்வி.

அல்லது வேண்டுமென்றே வடக்கில் வன்முறைகளும், அசாதாரண சூழல் நிலவவேண்டும் என்று இலங்கை அதிகார வர்க்கத்தினர் எதிர்பார்க்கின்றார்களா என அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எதுவாயினும் வடக்கில் நிகழும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நாளை மிகப்பெரியதொரு எதிர்விளைவுகளுக்கு நாட்டை இட்டுச் செல்லும் என்பதை கட்டியம் கூறி நிற்கின்றன.

நெடுந்தீவை சொந்த இடமாக கொண்ட ந.கம்சிகா (வயது27) என்ற இளம் கர்ப்பிணி பெண் ஊர்காவற்துறை சுருவில் பகுதியில் வசித்துவந்த நிலையில்24.01.2017 மதியம்அவருடைய வீட்டுக்கு சென்ற விசமிகள் குழ ஒன்று குறித்த கர்ப்பிணி பெண்ணை மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளது.இதனால் குறித்த கர்ப்பிணி பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதன்போது இருவர் பொதுமக்களிடம் சிக்கியுள்ளதுடன் மேலும் சிலர் தப்பி சென்றிருக்கின்றனர்.இந்நிலையில் ஊர்காவற்துறைப்பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டவர்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துச் சென்றிருக்கின்றனர்.

இப்படியாக கர்ப்பிணிப் பெண்களைக் கூடக் கொலை செய்து பழிதீர்க்கும் யாழ்ப்பாணச் சமூகத்தின் விஷக்கிருமிகளின் இந்த ஈனச்செயலை இனி எங்குபோய் முறையிடுவது. இந்தப் படுபாதகச் செயலைப்புரிந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்திக் கடும்தண்டனை வழங்கவேண்டும். முதல் பாதுகாப்புத் தரப்பினரின் சரியான நடவடிக்கைகளே மக்களின் பாதுகாப்பான இயல்பு வாழ்வுக்கு வழிவகுக்கும் என நம்புகிறோம்!...

- ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## தானது விரும்பு....

தானம் என்றால் உங்களுக்குத் தெரியும். வறுமையில் வாடுபவர்களுக்குத் தானம் கொடுத்து உதவுவதே தானம். அதாவது பிறருக்குக் கொடுத்தல் கொடைத்தன்மை. இப்படித் தானம் செய்வதில் தன்னிகரற்று விளங்கியவன் கர்ணன், சிபிச்சக்கரவர்த்தி. இவர்கள் கதை எல்லாம் உங்களுக்குத் தெரியும். இக்குணத்தினால் இவர்கள் பெற்ற உயர்வு பற்றியும் அறிவீர்கள். தானங்களில் எத்தனையோ வகை உண்டு. அன்னதானம், கோ (பசு) தானம், வஸ்த்திரதானம், திரவியதானம் இப்படிப் பலப்பல. இவ்வாறு தானங்களைச் செய்யும்போது நல்ல ஒழுக்கமுடையவர்களுக்கே தகுதியானவர்களுக்கே, செய்யவேண்டும். அப்படித் தானம் செய்தால் நமது பாவம் போகும் என்பார்கள். ஆகவே தானம் செய்யும்போது தகுதியுடையவர்களுக்கே தானம் செய் என ஔவைப் பாட்டி கூறுகிறார்...

## திருமாலுக்கு அடிமைசெய்.....

ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி கடவுளை வணங்குவார்கள். கடவுள் எல்லா உயிர்களையும் காப்பாற்றுகிறார். அத்தகைய கடவுளை வணக்கித் தொண்டு செய்தால் அவர் நம் கஸ்டங்களைப் போக்கிச் சுகமளிப்பார். நம் இந்து சாஸ்த்திரங்களின்படி பல கடவுளர்கள் உண்டு. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு கடவுளை உருவாக்கியிருக்கின்றார்கள். உருவாக்குவதற்கு பிரமா காத்தல் கடவுள் திருமால், அழித்தலுக்கும் சிவன் இப்படியே பல்வேறு காரியங்களுக்கும் பல கடவுள்கள். இவ்வுலகில் துன்பமின்றி வாழ, காக்கும் கடவுளான திருமாலுக்குத் தொண்டு செய் என்கிறார் ஔவைப்பாட்டி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்...... (தொடர்ச்சி)

**26-சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை...**

சந்ததிக்கு - குலம் விளங்குவதற்கு, அழகு - அழகாவது எது என்றால் வந்தி செய்யாமை. மலடின்றி வாழ்வதே. சந்ததி விளங்க வேண்டுமென்றால் (கருத்தடை செய்யாது) மனைவியுடன் கூடி வாழ வேண்டும்.

**27-சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு...**

பெற்றவர்களுக்கு அழகு தருவது எது என்றால் அவர்கள் பெற்ற பிள்ளைகளைப் பார்த்து உலகத்தினர் சான்றோர் என்று புகழ்வதே. பெற்றவர்களுக்கு அழகு எது என்றால் அவள் பெற்ற மக்களை கல்வியறிவால் நிறைந்தோர் என்று உலகம் சொல்வதே.

**28-சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு....**

பெருமானைப் பேணிப் போற்றி வழிபட்டால் தவத்திற்கு அழகு. அதுவே தவத்திற்கு அழகாம். தவத்திற்கு அழகு சிவத்தை வழிபடுதலே.

**29-சீரைத் தேடின் ஏரைத் தேடு...**

சீரை- சீர் பெற்ற வாழ்வை விரும்பினால் ஏரைத் தேடு. அதாவது பயிர்த்தொழிலைத் தேடிக்கொள். சிறப்புடன் வாழ விரும்பினால் பயிர்த் தொழிலையே தேடவேண்டும்.

**30-சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்...**

சுற்றத்தாருக்கு அழகு எது என்றால் சூழ இருத்தலாகும். அதாவது நன்மையிலும் தீமையிலும் சூழ்ந்து இருப்பதே. நன்மையிலும் தீமையிலும் நீங்காது (சமீபங்கள்) சூழ்ந்திருப்பதுதான் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்...

அறியாத வயதில்
அன்னை முந்தானை பின்னே
அழுகையின் பிறப்பாய்
மாணவர் நாம் இருந்தவேளை
அன்பின் வடிவாய்
எம்மை அணைத்த
தாயவர்கள்...
ஆணவம் இன்றி
இன்முகத்தடனே
விளையாட்டுப் பிள்ளைகளாய்
நாம் இருந்த வேளையெல்லாம்
தன்மடி மீது எமை இருத்தி
தயவாகப் பாடம் புகட்டிய
தன்னிகரில்லா தெய்வமவர்கள்...
அ, ஆ உயிர் தொடங்கி
க. கா மெய் வரை
மெய்ஞானம் உணர்த்திய
பெரும் புலவர்கள் இவர்கள்...
காலம் பல கடந்த நிலையிலும்
எம் கரங்களில் தவழும்
பழைய புகைப்படங்களில்
பாசமாய் புன்னகை செய்யும்
புண்ணியவான்கள்
எம் பள்ளி ஆசான்கள்....

செல்வி.சு எஸ்தர்
ரூத் மிஷன்-கிளிநொச்சி

## வாசிப்பே வாழ்வு.....

அரிது அரிது மானிடராய்
பிறப்பது அரிது
அதிலும் பூரண மனிதனாய்
வாழ்வது அதைவிட அரிது
சட்டங்கள் ஆள்வதும்
பட்டங்கள் பெறுவதும்
சிறந்த மக்களாய் வாழ்வதும்
வாசிப்பினாலே...

தலைசிறந்த உலகில்
தரணி எங்கும் புகழ்ந்திட
எம்மை உயர்த்துவதும்
வாசிப்பே ஆகும்...

தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்
மனிதவாழ்வின் இருளையும்
அறியாமை இருளையும்
அகத்திலிருந்து
அகற்றும் வாசிப்பே
என் சிறப்பான வாழ்வு......

செல்வி.சிறி சுகன்யா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

---

## நன்றிகள்!..

மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன் சிவகாந்த்-சிவராசா
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகள்! எதுவேண்டும்.......

(செல்வி.இ திலக்சனா
ரூத் மிஷன்-கிளிநொச்சி)

குருகுல வாசம் முடித்து விடை பெறுவதற்காக குருவிடம் வந்தனர். "நீங்கள் விடைபெறும் முன்பாக என்னிடம் என்ன வேண்டும் என்று கேட்கலாம் எனக் குரு சொன்னார். "நான் பொருளீட்டும் வழிமுறைகளை நீங்கள் சொல்லித்தர வேண்டும்" என்று பாண்டியன் கேட்டான். ராசேந்திரனோ "எனக்கு எதிலும் அளவான ஆசை வேண்டும். போதுமென்ற மனத்திற்கான வழிமுறை வேண்டும்" என்று குருவிடம் கேட்டான். இருவரின் விருப்பத்திற்கும் தேவையான அறிவுரைகளைக் கூறி ஐந்தாண்டுகள் கழித்துத் தன்னைப் பார்க்க வருமாறு குரு அனுப்பி வைத்தார்.

இருவரும் தங்களுக்குத் தெரிந்த வாணிபத்தைச் செய்யத் தொடங்கினர். பாண்டியன்வட்டித்தொழில், வாணிபத் தொழில், பட்டுத்தொழில் என்று பல்வேறு தொழில்கள் செய்து செல்வத்தை அளவுக்கு அதிகமாகச் சம்பாதித்துக்கொண்டிருந்தான். இது போதாதென்று வெளிநாடுகளுக்கும் சென்று பணம் சம்பாதித்தான். எவ்வளவு சம்பாதித்தும் அவன் பண ஆசை அவனை விடவே இல்லை. இதனால் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்கமுடியாமல் கவலைப்பட்டான். ராசேந்திரன் தனக்குத் தெரிந்த வேலைகளைச் செய்து அளவோடு பணத்தைச் சம்பாதித்தான். பண ஆசை அளவோடு இருந்தபடியால் மகிழ்ச்சியாகக் குடும்பத்தோடு வாழ்ந்தான்.

ஐந்து ஆண்டுகள் கழிந்தன. இருவரும் குருவிடம் சென்றனர். பாண்டியனோ தான் மகிழ்ச்சியுடன் இல்லை என்று குருவிடம் எடுத்துக்கூறினான். ராசேந்திரனோ மகிழ்ச்சிக்கும் செல்வத்திற்கும் பஞ்சமில்லை என்றான். குரு ராசேந்திரனைப் பாராட்டினார். உடனே பாண்டியன் குருவே ராசேந்திரன் என்னைவிடக் கெட்டிக்காரன் என்று கூறுகிறீர்களே...ஆனால் அவனிடம் என்னைப்போல் சொத்துச் சேர்க்கவில்லையேஎன்று... பெருமை அடித்துக் கொண்டான். ஆனால் இந்தச் சொத்தால் நிம்மதிகிடைக்கவில்லைஎன்பதை உணர்ந்த பாண்டியன்... ஆமாம் குருவே என்ஆசையின் காரணமாக பேராசை வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேன். உணவு சமைப்பது சாப்பிடுவதற்குத்தான் அழகு பார்ப்பதற்கல்ல என்பதைப் புரிந்துகொண்டேன் என்றான். இனிப்போதுமென்ற மனத்தோடு வாழ்க்கையை மனநிறைவோடு அனுபவிப்பேன் என்றான். குருவும் மனநிறைவோடுவாழ்த்தி இருவரையும் வழியனுப்பி வைத்தார்!........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் மனிதனும்........

இயற்கையின் அற்புத படைப்பு மனிதகுலமாகும். ஆகவே மனிதன் இயற்கையோடு ஒட்டி, இயற்கையை மதித்து வாழ்வானாயின் அவன் அடையமுடியாத சிறப்பு இல்லை என்றே சொல்லலாம். இயற்கை என்பது இயல்பாக இருப்பது என்னும் பொருள் கொண்டது. ஒப்பீட்டளவில் மனிதனின் தலையீடு இன்றித் தன் இயல்பு நிலையில் சூழல் தொகுதிகளில் காணப்படும் பொருட்கள், இயற்கை வளங்கள் எனப்படும். இவை சுற்றுச் சூழலில் இருந்து தருவிக்கப்படுபவை. இவற்றில் பெரும் பான்மையானவை நம் வாழ் விருப்பிற்கு அத்தியாவசியமானவையாகவும் தேவைகளுக்குப் பயன்படக்கூடியவையாகவும் அமைகின்றன.

ஆதிகால மனிதன் இயற்கையோடு இயற்கையாய் இணைந்து வாழ்ந்து வந்தான். இயற்கையின் சோதனைகளை நேருக்கு நேர் எதிர்கொண்டான். காலப்போக்கில் இயற்கையை மதித்து தெய்வமாகப் போற்றத் தொடங்கினான். ஆகாய வெளியை ஆகாச வாணி என்றும், பூமியைப் பூமாதேவி என்றும், நீரை கங்காதேவி என்றும், நெருப்பை அக்கினிபகவான் என்றும், காற்றை வாயுபகவான் என்றும், பஞ்சபூதங்களை அவன் வழிபடத் தொடங்கினான். அதன் மூலம் இயற்கையின் மீது அன்பு செலுத்தவும், அதைப் பாதுகாக்கவும் அவன் கற்றுக்கொண்டான்.

ஆனால் இன்று இயந்திரங்கள் வந்ததும் அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் மனிதன் தனது பிடிக்குள் எடுத்துக்கொண்டு விட்டதால், இயற்கைமீது மாற்றமுடியாத ஒரு தாக்கம், பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் போர், வறுமை, வறட்சி எனப் பூமியே அழிவை நோக்கிச் சென்றுவிட்டது. இதனால் இயற்கையின் சீற்றம் பூமியில் அதிகரித்து வருகின்றது. இயற்கையும் அடிப்படையாக அரவணைத்துக்கொண்ட வாழ்க்கைதான் நிலையானது. நிம்மதியானது என்பதாகும். எனவே நாம் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்வதும், முரணாக எதிராக வாழ்வதைத் தவிர்ப்பதன் மூலம் இயற்கை அழிவின் துன்பத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு இயற்கை அம்சங்களைப் போற்றி வாழ்வது அவசியமானதாகும். தவறான பழக்கங்கங்களாலும் உணவு முறைகளாலும் மனிதன் நோய் நொடிகளுக்குள்ளாகின்றான். எனவே இவைகளிலிருந்து எம்மைப் பாதுகாக்க இயற்கையோடு இணைந்து வாழவேண்டும். இயற்கையின் பங்கானது மனிதவாழ்வில் மிகப்பெரிதாக இருப்பதால் இயற்கையைப் போற்றுவோம்!..நலமாக வாழ்வோம்!...

செல்வி பவித்திரா பிரபாகரன்
எசன்-ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளையும் சுண்டெலியும்......

அது ஒரு அழகிய குளம். அந்தக் குளத்திற்கு அருகில் மரப்பொந்து ஒன்று இருந்தது. அந்த மரப்பொந்தில் சுண்டெலி ஒன்று வசித்து வந்தது. அந்தச்சுண்டெலிக்குக் குளத்தில் வசித்த தவளையுடன் நட்பு ஏற்பட்டது. தினமும் அந்தத் தவளையும் எலியும் சந்திப்பது வழக்கமாகியது. ஒரு நாள் எலி, தவளை குளத்தில் நீராடிக்கொண்டிருப்பதைப் பார்த்தது. உடனே எலி தவளையிடம் "எனக்கும் நீச்சல் கற்றுத்தர முடியுமா?" என்று கேட்டது. தவளையும் "நாளை உனக்கு நீச்சல் கற்றுத் தருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றது.

அடுத்தநாள் சுண்டெலிக்கு நீச்சல் கற்றுத்தருவதாகக்கூறிய தவளை தன்னுடைய காலை எலியின் காலுடன் சேர்த்து ஒரு கயிற்றினால் கட்டிக்கொண்டது. அப்போது மேலே பறந்துகொண்டிருந்த கழகு ஒன்று இவற்றைப் பாய்ந்து தாக்க வந்தது. உடனே தவளை தனது உயிரைப் காப்பாற்றிக் கொள்வதற்காக சுண்டெலியுடன் தண்ணீருக்குள் பாய்ந்தது.

தண்ணீரில் மூழ்கிய சுண்டெலி மூச்சுத்திணறி இறந்து போனது. அதன் உடல்மேலே மிதந்தபோது அதனுடைய கால்கள் தவளையுடன் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தது அந்தச்சமயம் தண்ணீரின்மீது சுண்டெலி செத்து மிதந்ததைக்கண்ட கழகு கீழ் நோக்கி வந்து அந்த எலியைக் கவ்விக்கொண்டு உயரே பறந்தது. அதனுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த தவளையும் கழகின் பிடியில் சிக்கியது இரண்டு விருந்தும் கிடைத்த சந்தோஷப்பட்டது. எனவே இக்கதையின் மூலம் எம்மால் முடியாத காரியங்களில் நாம் ஒருபோதும் ஈடுபடக்கூடாது என்னும் படிப்பினையை நாம் கற்றுக்கொள்வோம்.

செல்வி.வி திர்சா
ரூத் மிஷன்-கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A- Z லேட்டஸ்ட் ஆத்திசூடி.....

A-ஆங்கில முதல் எழுத்து எகிப்திய மொழியிலிருந்து பெறப்பட்டது.
B-வைட்டமின் பெருமளவில் பாலில் உண்டு.
C-ஆங்கிலத்தில் இந்த எழுத்து தன் ஒலியில் அமையாது.
D-அமெரிக்காவில் இதன் பெயரில் ஆறு உள்ளது.
E-காட்ஸ்பை என்ற ஆங்கில நாவலில் இந்த எழுத்தே கிடையாது.
F-ஃபாரன்ஹீட் வெப்பநிலை என்று குறிக்கப்படுகிறது.
G-சூரியன் வகுப்பு நட்சத்திர வகையைச் சார்ந்தது.
H-ஹைட்ரஜன் வாயுவைக் குறிக்கும் இக் குறியை உருவாக்கியவர் லவாய்சியர்.
I-யின் தலையில் வைக்கப்படும் புள்ளி, 14ம் நூற்றாண்டில் பிறந்தது.
J-ஆங்கில மொழியில் கடைசியாக சேர்க்கப்பட்டது.
K-வைட்டமின் குறைந்தால் ரத்தம் உறையாது.
L-ரோமன் எண்ணிக்கையில் ஐம்பதைக் குறிக்கும்.
M-வகுப்பு நட்சத்திரங்கள் சிவப்பாய் ஒளிரும்.
N-ரத்தப் பிரிவுகளில் இந்தவகை வெகு அபூர்வமானது.
O-என்ற எழுத்து ஆச்சரியத்தை வெளிப்படுத்தும்.
P-என்பது வேதியியலில் பாஸ்பரஸைக் குறிக்கும்.
Q-எந்தவொரு ஆங்கில வார்த்தையிலும் இதைப் பின்பற்றி U வரும்.
R-ருவாண்டா நாட்டுக் கொடியில் இது காணப்படும்.
S-ஆப்ரிக்கர்களிடையே இந்த இரத்தப்பிரிவு காணப்படுகிறது.
T-புகழ்பெற்ற டைப் கார்கள் ஃபோர்டின் 9வது மாடலாகும்.
U-ஜெர்மனியர்கள் நீர்மூழ்கிக் கப்பல்களை இந்தக் குறிச்சொல்லால் குறிப்பிடுவார்கள்.
V-என குறிக்கப்படும் வெனேடியம், கார் ஸ்டியரிங்குகள் செய்யப்பயன்படுகிறது.
W-முதன்முதலில் டைப்ரைட்டர் டைப் செய்த எழுத்து .
X-பெருக்கலுக்கு என்ற குறியை ஆதிரட் என்ற கிறிஸ்தவ மதகுரு பயன்படுத்தினார்.
Y குரோமோசோம்களால் பெண்களுக்கு வழுக்கை விழுவதில்லை.
Z என்பது மண்டலம் என்பதைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 4

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | 8 | 2 |
| | | 9 | 4 | | 8 | | | |
| 7 | | | | | 5 | | | |
| | | 6 | 3 | 7 | | 8 | | |
| | 3 | | | | | | 4 | 7 |
| | 9 | | 1 | | 4 | | | |
| 6 | | 3 | | | | 5 | | 8 |
| 1 | | | | | 3 | | 7 | |
| | | | | 2 | | | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 93
## (புரட்டாதி--ஐப்பசி-2016)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 உலகில் இவர்களுக்கும் ஒரு தினம் கொண்டாடப்படுகின்றது

06-07 பழங்கள் வைக்கும் பொருள்

வ – இ:

08-07 காரமான தின்பண்டம்

12-10 இனிப்பான தின்பண்டம்

கீ – மே:

14-10 வீட்டு மிருகம்

15-07 பெண்கள் அணிவது

16-04 பாடல், கவி எழுதுவதில் வல்லவர்

மே – கீ:

01-13 ஈர்ப்புச் சக்தியுள்ள பொருள்

06-10 பறவைகள் வாழும் இடம்.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களே இதையும் படிக்கவும்.........

குழந்தைகளின் எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோர்களின் கடமையாகும்.பல சவால்கள் நிறைந்த இந்த உலகத்தில், எத்தனை தடைகள் வந்தாலும் அதை எப்படி எதிர்கொள்வது என்பதை கட்டாயம் கற்றுக் கொடுத்தாக வேண்டும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியவை

குறும்புகள் அதிகம் உள்ள குழந்தைகள் அதிகமாக சேட்டைகள் செய்யும். எனவே அந்த குழந்தைகளிடம் பள்ளிக்குச் செல்லவில்லை என்றால் டீச்சர் அடிப்பாங்க என்று அவர்களை பயம் காட்டக் கூடாது. ஏனெனில் பள்ளிக்கு சென்றால் டீச்சர்கள் நம்மை துன்புறுத்துவார்கள் என்று குழந்தைகளின் மனதில் தோன்றும்.குழந்தைகள் சரியாக படிக்கவில்லை என்றால் அவர்களை அடித்து மிரட்டாமல், எந்த பாடம் புரியவில்லை என்று கேட்டு அவர்களுக்கு அன்பாக சொல்லிக் கொடுக்க வேண்டும்.பெற்றோர்கள், தங்களை தவிர வேற்று நபர்களிடம் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை சொல்லிக் கொடுத்து, குழந்தைகளிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

குழந்தைகள் பள்ளிகளில் மற்ற மாணவர்களுடன் போட்டிகள் போடும் போது, அது ஆரோக்கியமான போட்டியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பள்ளிகளில், தங்கள் குழந்தைகளின் படிப்பு மற்றும் மற்ற பழக்க வழக்கங்களை பற்றி அடிக்கடி கேட்டு தெரிந்துக் கொள்ள வேண்டும். குழந்தைகள் பள்ளி செல்லும் போது, அவர்களின் பையில், நமது வீட்டின் விலாசம், தொலைபேசி நம்பர் உள்ள கார்டை மறக்காமல் வைக்க வேண்டும். ஏனெனில் குழந்தைகள் காணாமல் போய்விட்டால், அந்த கார்ட் பயன்படும்.

பெற்றோர்களை தவிர முகம் தெரியாத வேறு நபர்கள் யாரேனும் அழைத்தால், அவர்களுடன் போக கூடாது என்று பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு தங்க நகைகளை அதிகமாக போட்டு அனுப்பக் கூடாது. ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதில் இருந்து தன்னை எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பதை பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும். பள்ளிகளில் மற்ற மாணவர்களுடன் சண்டை போடாமல் அன்பாகவும், நட்பாகவும் பழக வேண்டும் என்பதை பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)

( [illegible] )

## Tamilischer Bildungsverein Deutschland e.V. ( Europa )

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

---

## பொதுப் பரீட்சை - 2016 / 2017
## தமிழ்மொழி

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் ஐரோப்பா தழுவிய முறையில் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சை, எதிர்வரும் 2017ஆம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் (2017.02.18) திகதி நடைபெறவுள்ளது. சகல மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றித் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திச் சான்றிதழ்களையும், பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைப் பரீட்சார்த்திகளின், அதிபரின் உறுதியுடன் பாடசாலை மூலமும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின், பெற்றோரின் உறுதியுடன் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பரீட்சைக்கான செலவுக் கட்டணமாக பாடசாலைப் பரீட்சார்த்திகள் 15 யூரோவும் (15,-€), தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 20 யூரோவும் (20,-€) அனுப்புதல் வேண்டும். பரீட்சைகள் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு நடைபெறும். விண்ணப்பங்கள் 2016.12.30ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

முகவரி:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.
Postfach 1648
59159 Kamen
Germany

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.
Städtische Sparkasse UnnaKamen, Deutschland
IBAN: DE91 4435 0060 00 05053335
SWIFT-BIC: WELADED1UNN
Verwendungszweck: Prüfung

மேலதிக தொடர்புக்கு:-

P. Srijeevaghan ( Vorsitzender )
Nordenmauer 17
59174 Kamen, Germany
Tel: 02307 / 289384 Fax: 02307 / 2612518

இணையத்தளம்: www.Kalvichseyal.com

இங்ஙனம்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முக்கிய நிலையங்கள்

செய்மதி தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
புடைவைக் கைத்தொழில் நிலையம் - வியாங்கொடை, பூகொட துல்கிரிய
எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த
பிறிமா மாவு ஆலை - திருகோணமலை
விவசாய ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பள்ளம, இங்குராகொட, பதல்கொட
தாவரவியல் பூங்காக்கள் - பேராதனை, கனோபத்த, ஹக்கல
தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை
சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகலை, கண்ணொறுவ
ரயர் (டயர், டியூப்) தொழிற்சாலை - களனி
இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
வனவிலங்குச் சரணாலயம் - வில்பத்து, யால, உடவளவை, றுகுணு, லகுகல
பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்டை
உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரேலியா
சீமெந்து தொழிற்சாலை - புத்தளம், காலி, (காங்கேசன்துறை அழிந்துள்ளது)
ஓட்டுத் தொழிற்சாலை - அம்பாறை
ஆயுர்வேத ஆரய்ச்சி நிலையம் - நாவின்ன
அரசினர் சுதேச வைத்தியசாலை - இராஜகிரிய
பறவைகள் சரணாலயம் - முத்துராஜவெல, குமண, பூந்தல
குஷ்டரோக வைத்தியசாலை - மாந்தீவு மட்டக்களப்பு
கலாசார முக்கோண வலையம் - கண்டி, அனுராதபுரம், பொலநறுவை
சீனித் தொழிற்சாலை - கந்தளாய்,அம்பாறை
காரீயச் சுரங்கம் - போகலை
காரீயத் தொழிற்சாலை (இல்மனைட்) - புல்மோட்டை
புற்றுநோய் வைத்தியசாலை - மகரகம
காகிதத் தொழிற்சாலை - வாழைச்சேனை
மிருகக்காட்சிச்சாலை - தெஹிவளை
உப்பு உற்பத்தி நிலையம் - ஆனையிறவு, அம்பாந்தோட்டை
இரசாயனக்கூட்டுத்தாபனம் - பரந்தன் (அழிந்துள்ளது)

இவற்றைவிட சிறு சிறு கைத்தொழில் நிலையங்களும் ஆராய்ச்சி நிலையங்களும், தொழிற்சாலைகளும் ஆங்காங்கே இயங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியல் யாப்பு வரலாற்றுச் சுருக்கம்

இலங்கையின் வரலாறு 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகால வரலாற்றைக் கொண்டதாகும். இலங்கையின் காலத்தால் முந்திய வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தின்படி இலங்கையின் வரலாறு கி.மு 6 ஆம் நூற்றாண்டு அளவில் இந்தியாவின் கலிங்க நாட்டிலிருந்து துரத்திவிடப்பட்ட அந்நாட்டு இளவரசனான விஜயன் என்பவன் தனது தோழர்கள் எழுநாறு பேருடன் இலங்கையில் வந்து இறங்கியதுடன் ஆரம்பமாகின்றது. எனினும் இதற்கு முன்னரே இயக்கர், நாகர் ஆகிய இரண்டு இனத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்தது பற்றியும், அவர்கள் இங்கே அரசமைத்து ஆண்டது பற்றியதுமான குறிப்புக்களும் மகாவம்சத்தில் காணப்படுகின்றன. 16ஆவது நூற்றாண்டில் நாட்டின் சில கடலோரப் பகுதிகள் போர்த்துக்கேய, ஒல்லாந்திய பிரித்தானியப் பேரரசுகளின் கீழ் இயங்கின. அனுராதபுரத்திலிருந்து கண்டி வரை 181 அரசர்களும் அரசிகளும் வெவ்வேறு காலகட்டங்களில் ஆண்டு வந்துள்ளனர்.1815க்குப் பிறகு முழுமையான நாடும் பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சியின் கீழ் வந்தது. இலங்கை இந்து சமுத்திர பிராந்தியத்தின் கீழ் இருக்கும் ஒரு சிறிய நாடு என்றாலும், இது மிக நீண்ட காலமாக வெளிநாட்டவர்களினால் ஆட்சி செய்யபட்டது.

1505-1658 வரை போர்த்துகேயரினாலும்

1658-1796 வரை ஒல்லந்தரினாலும்

1796-1948 வரை ஆங்கிலேயரினாலும் ஆட்சி செய்யப்பட்டது.

போர்த்துகேயர் மற்றும் ஒல்லாந்தரை பொறுத்த வரை அவர்கள் பெரும்பாலும் அரசியலில் ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் அரசியலில் பல மாற்றங்களை கொண்டு வந்தார்கள். இந்த வகையில் இலங்கையில் அவர்களே அரசியல் யாப்பினை முதலில் இலங்கைக்கு அறிமுகம் செய்தவர்கள் ஆவார்கள்.

இலங்கையில் ஆங்கிலேயரினால் அறிமுகப்படுத்த பட்ட அரசியல் யாப்புக்கள்

-கோல்புறுக் (1833)

-குறு மக்கலம் (1912)

-மனிங் (1921)

-மனிங்-டிவன்சயர் (1924)

-டொனமூர் (1931)

-சோல்பரி (1947)

இலங்கையரினால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள்.

1ம் குடியரசு அரசியல் அமைப்பு (1972)

2ம் குடியரசு அரசியல் அமைப்பு (1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

புலால் மறுத்தல்: –

251. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

253. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

254. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.

255. உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

256. தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (மாமிசம் உண்ணுதலை ஒழித்தல்)

251. தீன் உடலைப் பெருக்க மற்றொன்றின் உடலை உண்பவன் எவ்வாறு அருள் உடையவனாக இருப்பான்.

252. பொருளைப் பாதுகாக்காதவர்களுக்குப் பொருளால் பயனில்லை. அது போல் ஊன் தின்பவர்களுக்குக் கருணையால் வரும் நன்மை இல்லை.

253. கொலைக்கருவியைப் பிடித்தவர் மனம் கொலை செய்வதையே நாடும். அதுபோல மற்றோர் உடலைச் சுவைபட உண்டவர் மனம் அதனையே நாடும். அருளை நாடாது.

254. அருள் யாது என்றால் பிற உயிரைக் கொல்லாமை. அருள் அல்லது யாது என்றால் உயிரைக் கொல்லுதல் ஆதலால் கொன்று ஊன் தின்பது பாவம். அதனால் பொருளல்லது யாதென்றால் ஊன் தின்னக்கூடாது என்பதாகும்.

255. ஊன் உண்ணாதவனால்தான் உடலில் உயிர் நிற்கின்றது. ஊன் உண்பவனைப் பற்றிய துன்பம் அவனை விடுவதற்கு இடம்தராது.

256. ஊன் தின்பதற்காக மக்கள் உயிர்களைக் கொல்லா விட்டால் பொருள் வேண்டி ஊன் விற்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்.

257. புலால் உண்பதை ஓர் உடம்பின் புண் என்று உணர்வாரானால் புலாலை உண்ணாது இருக்க வேண்டும்.

258. குற்றம் நீங்கிய அறிவினை உடையவர்கள் ஓர் உயிர் நீங்கிய உடலைத் தின்னமாடடார்கள்

259. தீயில் நெய் முதலிய அவிகளைச்சொரிந்து ஆயிரம் வேள்விகளை செய்வதைவிட ஒன்றின் உயிரைப் போக்கி அதன் ஊனைத் தின்னாதது நல்லது.

260. ஓர் உயிரைக் கொல்லாமலும் புலாலைத் தின்னாமலும் உள்ளவனை எல்லா உயிர்களும் வணங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## இடம்:-

கழுதையும் பட்டாம்பூச்சியும் உலாப்போயின. மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். "இந்தஇடத்தில் நான் இசைக்கச்சேரி வைப்பேன் இங்கே எனக்கு வரவேற்பு இருக்கும்" என்றது கழுதை. அது பாடத் தொடங்கியது. என்ன கொடுமை கழுதைக் கச்சேரி கல்வீச்சு கலாட்டா என்று ஆகியது. அடிபட்ட கழுதையும் பட்டாம்பூச்சியும் ஊரின் எல்லையில் சாய்ந்து கிடந்த ஒரு குச்சி வேலியின் அருகில் வந்து சேர்ந்தன. கழுதைக்கு ஒரே கொண்டாட்டம். ஓணான்கள் வரிசையாக அங்கே உட்கார்ந்து தலையை ஆட்டிக்கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத்தொடங்கியது. என்ன ஆச்சரியம்!... எல்லோரும் தலையை ஆட்டிக்கொண்டிருந்தார்கள். வியப்போடு அசைவற்று நின்ற பட்டாம் பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு, ஒன்றும் வியப்படையாதே "இங்கே அப்படித்தான்" என்று கூறியது. சுருக்கமாக அது சொன்னது

"ஓணான்களின் ஊரில் கழுதைகளும் வித்துவான்களே"

## அலைவு:-

ஆறு, கடலில் ஓடிக் கலப்பதையும் அலை கரையைத்தேடி தழுவுவதையும் அன்றாடம் பார்த்துவந்த வானம்பாடிப் பறவை சிந்தனையில் ஆழ்ந்தது. "உலகம் புரிந்து கொள்ள முடியாத ஒன்றுதான்" என்றது வானம்பாடி. பிறகு அது பாடியது..

"மண்ணில் இருக்கிற ஆற்றுக்கு மண்ணில் வெறுப்பு
கடலில் ஆசை கடலில் இருக்கிற அலைக்கு
கடலில் வெறுப்பு, மண்ணில் ஆசை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லினம், மெல்லினம், இடையினம் கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள்....

தமிழில் உள்ள எழுத்துகளின் மொத்த எண்ணிக்கை முப்பத்து மூன்று என்பார் தொல்காப்பியர். மூன்றுதலையிட்ட முப்பதிற்று எழுத்து (தொல்.எழுத். புணரி. 1) என்பது அவருடைய வாக்கு. இம்முப்பத்து மூன்றெழுத்துகளை அவர் முதல் என்றும் சார்பு என்றும் இருவகையாக்குகின்றார். இவரது கணக்குப்படி முதலெழுத்தின்எண்ணிக்கை முப்பதாகும் சார்பெழுத்தின் எண்ணிக்கை மூன்று ஆகும் .

வீரசோழியம் இயற்றிய புத்தமித்திரரும், நேமிநாதம் இயற்றிய குணவீரரும் முதலெழுத்துமுப்பத்தொன்று என்கின்றனர்.

இவர்கள் ஆய்த எழுத்து ஒன்றனையும் சேர்த்துக்கொண்டனர். இவர்களுக்குப்பின் வந்தவர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார். இவர், தொல்காப்பியரொடு ஒத்துக்கொண்டார்.

மொத்தத்தில், தமிழில் உள்ள எழுத்துகள் எல்லாமும் உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என்னும் நான்கு பிரிவாகப் பிரிக்கப்படும்.

உயிர்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டு எழுத்துக்களையும் உயிர் என்பர். இவை குறில், நெடில் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படும்.

குறில்:- அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறில்களாம். இவற்றைக் குற்றெழுத்து என்றும் கூறுவர்.

நெடில்:- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நெடில்களாம். இவற்றை நெட்டெழுத்து என்றும் கூறுவர். இங்கே கூறப்பட்ட சில உயிர்கள் (ஐ, ஔ) தன் இயல்பான அளவிலிருந்து குறுகி ஒலிப்பதும் உண்டு.

மெய்

மெய்யெழுத்துக்களை ஒற்று என்றும், புள்ளி என்றும் கூறுவர். க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் தமிழில் உள்ள மெய் எழுத்துக்கலாகும். இவை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாகப் பிரிக்கப்படும்.

வல்லினம்:- வல்லினம், வங்கணம், வலி ஆகியன ஒரு பொருட்கிளவிகள். க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறும் வல்லின மெய்களாம்.

மெல்லினம்:- மெல்லினம், மெங்கணம், மெலி ஆகியன ஒரு பொருட்கிளவிகள். ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறும் மெல்லின மெய்களாம்.

இடையினம்:- இடையினம், இடைக்கணம், இடை ஆகியன ஒரு பொருட்கிளவிகள். ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய ஆறும் இடையின மெய்களாம்.

உயிர்மெய்

மெய்யோடு உயிர்கள் சேர்ந்து க, கா, கி, கீ என இவ்வாறு தோன்றும் எழுத்துக்கள் யாவும் உயிர்மெய் எனப் பெயர் பெறும். 18 மெய்களும் 12 உயிர்களும் சேர்ந்து 216 உயிர்மெய்கள் தோன்றுகின்றன.

ஆய்தம்

ஆய்த எழுத்தினைத் தனிநிலை என்றும் கூறுவர். ஆய்தமும் தனக்கு இயல்பான மாத்திரையிலிருந்து குறுகி ஒலித்தல் உண்டு. ஃ என்பது ஆய்த எழுத்தாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-155
## (தை- மாசி 2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-06 தமிழர்களின் திருநாள் ஒன்று.
10-12 பௌத்தர்கள் வழிபடும் கோவில்.
23-27 மறைந்தாலும் தமிழர் மனங்களில் இடம்பிடித்த முதலமைச்சர்.
37-38 கொடிய மிருகம்.
47-49 மனம் ஒத்த சொல்.

**வ-இ**

07-06 வீடு கட்டப் பயன்படுவது.
20-17 நோன்பு ஒத்த சொல்.
33-30 பிணக்கு ஒத்தசொல்.
41-38 இலக்கியத்தில் ஒருத்தி.
46-43 வன்னிப் பிராந்தியத்தில் ஓர் ஊர்.

**கீ-மே**

20-06 உறுப்புக்களில் ஒன்று.
23-09 சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம். (நகரம்)
34-20 எல்லா விடையங்களும் தெரிந்தவர் இவர்.
43-22 வட்டத்தின் அரைவாசி.
47-26 இறந்தவர்களுக்கு வணக்கம் செலுத்துவது.

**மே-கீ**

01-22 பலமானது, கடினமானது என்று கூறலாம்.
07-28 வாசனைத் திரவியங்களில் ஒன்று
11-32 வருடாவருடம் இவர்களுக்கும் ஒரு தினம் கொண்டாடப்படும்.
28-49 பூ, மலர் ஒத்த சொல்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சில நிகழ்வுகள்.... (தை - மாசி மாதம்)

## இலங்கை

01.01.1958-வாகனங்களில் சிங்களச் "சிறி" எழுத்து முதன்முதல் பொறிக்கப்பட்டது

02.01.1993-யாழ்-கிளாலி படுகொலைநாள் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

03.01.1995-சந்திரிகா அரசுடனான விடுதலைப்புலிகளின் 2ம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட நாள்.

10.01.1974-4வது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற போது இலங்கைப் படைகளின் தாக்குதலில் 9 தமிழர்கள் பலி.

16.01.1993-கேணல் கிட்டு உட்பட 9 விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் வங்கக் கடலில் கப்பலை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்த நாள்.

17.01.2001-பொங்குதமிழ் நிகழ்வு முதன்முதல் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது

23.11970-தமிழ் இளையோர் பேரவை ஆரம்பிக்கப்பட்ட நாள்.

28.01.1987-மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட நாள்.

02.02.1998-கிளிநொச்சியை முற்றாக விடுதலைப்புலிகள் கைப்பற்றிய நாள்.

02.02.1619-போத்துக்கல் நாட்டவரான ஒலிவீரா - சங்கிலி மன்னனுடன் போர். சங்கிலியன் தோல்வி. சுதந்திர யாழ்ப்பாண அரசு போத்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட நாள்.

08.02.1956-சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற சட்டம் சிங்கள ஆட்சியாளர்களால் பிரகடனப்படுத்திய நாள்.

10.02.1991-வன்னி நிலப்பரப்பில் அரசபடைகளுக்குச் சொந்தமான உலங்கு வானூர்த்தி ஒன்றை விடுதலைப் புலிகள் சுட்டுவீழ்த்திய நாள்.

14.02.1977-காங்கேசன்துறை பொலிஸ் நிலையம்மீது விடுதலைப்புலிகளின் தலைவர் தலைமையில் முதன்முதலாகத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

19.02.1986-அம்பாறை-உடும்பன்குளம் என்ற இடத்தில் 60 பொதுமக்களை சிங்களப்படைகள் படுகொலை செய்தநாள்.

## பிரபலங்கள்...

02.01.1782-கண்டியின் கடைசி மன்னன் கீர்த்திசிறி இராஜசிங்கன் நினைவுநாள்.

05.01.2000-மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவுநாள் (12.08.1938-05.01.2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.01.1924-சேர் பொன் அருணாசலம் நினைவுநாள் (14.09.1853-09.01.1924)
16.01.1993-விடுலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் கிட்டு நினைவுதினம் (02.01.1960-16.01.1993)
22.01.1947-சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் (30.08.1875-22.01.1947)
25.01.1922-சுன்னாகம் குமாரசாமிப்புலவர் நினைவுநாள் (12.01.1855-25.01.1922)
04.02.1747-தமிழறிஞர் வீரமாமுனிவர்(கொன்ஸ்டன்டைன் ஜோசப்) இத்தாலி நாட்டவர் நினைவுதினம் (08.11.1680-04.02.1747)
05.02.1898-தமிழறிஞர் சித்திலெப்பை நினைவுதினம் (11.061838-05.02.1898)
11.02.1924-நடிகமணி வி.வி.வைரமுத்து பிறந்தநாள் (11.02.1924-08.07.1989)
22.02.1938-சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன் பிறந்தநாள் (22.02.1938-06.07.1992)

## உலகப்பிரபலங்கள்...

03.01.1740-வீரபாண்டிய கட்டப்பொம்மன் பிறந்தநாள் 03.01.1740-16.10.1799)
08.01.1642-பூமி சூரியனைச் சுற்றிவருவதாகக் கண்டறிந்த இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ கலிலி நினைவுநாள் (15.02.1564-08.01.1642)
09.01.1324-மார்க்கோப்போலோ நினைவுநாள் (1254-1324)
12.01.1863-சுவாமி விவேகானந்தர் பிறந்ததினம் (12.01.1863-08.07.1902)
13.01.0356-கிரேக்க மன்னன் மகா அலெக்ஸாண்டர் நினைவுநாள் (0323-0356)
17.01.1917-தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் பிறந்ததினம் (17.01.1917-24.12.1987)
15.01.1929-அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய வீரன் மாட்டின் லூதர்கிங் பிறந்தநாள் (15.01.1929-04.04.1968)
21.01.1924-சோவியத்தின் சிற்பி லெனின் நினைவுநாள் (10.04.1870-21.01.1924)
24.01.1431-பிரான்ஸ் நாட்டின் தேசிய வீராங்கனை தேசபக்தை.ஜோன் ஒவ் ஆர்க் நினைவுநாள் (1412-1431)
26.01.1823-சின்னம்மை மருந்தைக் கண்டுபிடித்த சேர் எட்வேட் ஜென்னர் நினைவுநாள் (17.05.1749-26.01.1823)
29.01.0470-உலகப்புகழ் தத்துவஞானி சோக்கிரட்டீஸ் நினைவுநாள் (0400-0470)
30.01.1948-மகாத்மா காந்தி நினைவுநாள் (02.10.1869-30.01.1948)

02.02.1543-பூமி சூரியனைச்சுற்றி வலம் வருகிறது என்று கண்டறிந்த இத்தாலியரான நிக்கலஸ் கொப்பனிக்கஸ் நினைவுநாள் (1473-1543)
03.02.1969-தமிழக முதலமைச்சர் சி.என்.அண்ணாதுரை நினைவுநாள் (15.09.1909-03.02.1969)
12.02.1936-பிரபல எழுத்தாளர் சோவியத் மார்க்சிம் கார்க்கி நினைவுநாள்1868-1936)
16.02.1962-அணுவிஞ்ஞானி நோபல்பரிசு பெற்றவர் டென்மார்க் நாட்டவரான நீல்ஸ் போர் நினைவுதினம் (1885-1962)
17.02.1521-கடல்வழி உலகை வலம்வந்து பசுபிக் சமுத்திரம் என்று பெயர் சூட்டியவர் கடலோடி வேடினன் மகலென் நினைவுநாள் (1480-1521)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.2.1907-அணுக்குண்டின் தந்தை ரோபேட் ஒப்பின் நினைவுநாள் (22.04.1904-18.02.1967)

25.02.1779-அவுஸ்திரேலியாக் கண்டத்தை கண்டறிந்தவரான பிரித்தானியர் ஜேம்ஸ் குக் நினைவுநாள் (1728-1779)

## முக்கிய நிகழ்வுகள் சில

01.01.2017-ஆங்கில புதுவருடப்பிறப்பு

01.01.2002-ஐரோப்பிய நாணயம் புழக்கத்திற்கு வந்தது.

10.01.1787-அமெரிக்காவில் முதன் முதல்டொலர் நாணயம் புழக்கத்தில் வந்தது.

11.01.1510-ஆபிரிக்க மக்கள் முதன் முதல் அடிமைகளாகக் கடல்வழியாக கரிபியன் தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

12.01.1897-பாதுகாப்பான முகச்சவரக்கத்தியை அமெரிக்கரான கிங் சி கில்லட் என்பவர் கண்டறிந்தார்.

14.01.0000-தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாள்.

15.01.1883-அமெரிக்கரான கொல்ட் என்பவர் பிஸ்டல் (றிவோல்வர் வகைத் துப்பாக்கி) கண்டுபிடித்தார்.

20.01.1913-சினிமாத்துறை மையமான கொலிவூட் அமெரிக்காவில் தொடங்கியது

31.01.1903-அமெரிக்க ரைட் சகோதரர்களால் விமானம் கண்டுபிடிக்கப்பட்டது.

02.02.1290-வாசிக்கக்கூடிய கண்ணாடி முதன்முதல் இத்தாலியில் கண்டறியப்பட்டது.

07.02.1834-கணக்குப் பார்க்கும் இயந்திர சாதனத்தை இங்கிலாந்து நாட்டவரான சாள்ஸ் பார்வேஜ் என்பவர் முதன்முதல் கண்டறிந்தார்.

10.02.0776-உலகின் முதலாவது ஒலிம்பிக்போட்டி கிறீஸ்லாந்தில் நடைபெற்றது.

12.02.1555-புகையிலை ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு அறிமுகமாக்கப்பட்டது.

14.02.0000-உலகக் காதலர் தினம்.

19.02.1665-இங்கிலாந்து நாட்டவரான சேர் ஐசக் நியூட்டன் புவியீர்ப்புச் சக்தியைக் கண்டறிந்தார்.

20.02.1825-முதலாவது பயணிகள் புகையிரதம் இங்கிலாந்தில் அறிமுகமானது

23.02.1954-அமெரிக்க கான்ஸர் புற்றுநோய் மையம் முதன் முதலாக சிகரட் பிடித்தால் கான்சர் நோய் வரும் என உலகிற்று அறிவித்தது.

25.02.1840-உலகில் முதன் முதல் தபால் முத்திரையை அறிமுகப்படுத்தியது இங்கிலாந்து. "பிளாக் பென்னி" என்ற முத்திரை விநியோகத்திற்கு வந்தது.

27.02.1848-உலகிற்கு முதன் முதல் ஜேர்மனியரான கார்ல் மாக்ஸ் கம்யூனிசக் கொள்கையை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மகளே வா!....

தைமகளேவா மனதில் தைரியத்தை விதைக்க வா
தமிழர் திருநாளாய் தைப்பொங்கல் பெருநாளாய்
சாதிமத பேதமின்றி சமத்துவத்தை சொல்லியே
சரித்திரத்தில் நிலைத்திட்ட இன்பத் திருநாளே வா

வரண்டு கிடக்கும் வயல்கள் செழிக்கட்டும்
வாடிநிற்கும் உழவர் மனங்கள் மகிழட்டும்
உழவின்றேல் உணவில்லை உயிருமில்லை
உணர்ந்தே உறுதியுடன் கை கொடுப்போம்

போகியில் வரட்சிகளைக் கொளுத்தியே
பாலோடு புத்தரிசி பயறு சர்க்கரை நெய்யும்
முக்கனியும் கரும்பும் முற்றத்தில் படையலிட்டு
பொங்கிடுவோம் உவகையுடன் மங்கலத்தை

பயிர்கள் செழித்திட துணைநின்ற ஆதவனுக்கும்
உழவுக்கு உழைத்திட்ட காளைகளுக்கும் பொங்கலிட்டு
தமிழன் நன்றி சொல்லும் பாங்கை
தரணிக்கு உணர்த்திட்ட தை மகளே வா

உலகம் செழித்து உயிர்கள் மகிழ்ந்து
கலகம் நீங்கி கருணை நிறைத்து
உண்மை நேர்மை உயர்ந்த பண்பு
மண்ணில் நிறைந்து மனிதம் ஓங்க
தைமகளே வா

திருமதி கீத்தா பரமானந்தன் - ஜேர்மனி

## நட்பு

இன்பத்தில் மட்டுமல்ல
துன்பத்திலும்
தோள் கொடுக்கும்
உரிய சங்கமம் நட்பு....

## அன்பு

உடலை ஊடுருவி
உடலை உறைய வைத்து
உடலை இயக்கும்
சக்தியே அன்பு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதையாகி வித்தானரீர்...

மங்காத் தமிழ்மொழி
மறவரின் வீரத்தில்எங்கும்
பொங்கிட எழச்சியில்
எழுந்ததுசங்கென முழங்கென
சாவிலும் சரித்திரம்பொறித்திட்ட
வீரர்கள் உயிரின் கொடையில்
தகர்ந்திட்ட உயிரும்
தற்கொலைப்படையும்
புதைந்திட்ட உயிர்களும்
புதைகுழி வாழ்க்கையும்
நிகழ்ந்திட்ட கணங்களில்
குண்டின் மழையும்ஷெல்லின்
வீச்சிலும் சிதறிய வாழ்வு
எண்ணிடும் வேளையில்
நரம்புகள் புடைக்கும்
குருதியோ கொதிக்கும்
காடும் கழனியும்
காட்டுறை வாழ்வும்நீளும்
போரும் நிர்க்கதி
இரவும்தாங்கியே வாழ்ந்து
தம்முயிரீர்தோர்கல்லறைவாழ்ந்திடும்
காவியச் செம்மல்கள்
இதயத்தின் இருப்பிலே
என்றுமே வாழ்வோர்
விதையாகிப் போயினும்
வீரத்தின் வேர்கள்
விடுதலை மிடுக்கினை
விதைத்திட்ட வீரோர்!....

திருமதி வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி

# நான் அன்றும் இன்றும்.....

சிறகடித்துப் பறக்கும் சின்ன வயதில்
சிறகொடிந்து வாடினேன் வதங்கினேன்
அழகாய் படிக்கும் சின்ன வயதில்
அந்தப் படிப்பை இழந்து தவித்தேன்...

அம்மா அப்போ சொல்லைக் கேட்காமல்
அங்கும் இங்கும் அலைந்து திரிந்தேன்
மாடுகள் மேய்க்கக் காட்டிற்குச் சென்று
மந்தைகள் போல் அலைந்து திரிந்தேன்.

மீன் பிடிக்க ஆற்றுக்குச் சென்றேன்
மின்னல் அடிக்க நடுங்கி ஓடினேன்
வயல்களுக்கு வேலைக்குச் சென்று
அங்குவம்புப்பேச்சுக்களும் வாங்கினேன்

அம்மாவின்சொல்கேட்காமல் ஆசையில்
மோட்டார் சைக்கிள் ஓடி விழுந்தேன்
அதுவே போதுமென்று அன்றிலிருந்து
நான் படிப்பில் இறங்கி விட்டேன்!....

செல்வன் செல்வராசா நிரஞ்சன்
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி-மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிமை சங்கிலியை....

நாட்டுக்கு சுதந்திரம்
இல்லையென்றால்
மக்கள் வாழ்வு கேள்விக்குறி
தனி மனிதனுக்கு
சுதந்திரம் இல்லையென்றால்
அவனுக்கு நின்மதியே
ஒரு கேள்வி குறி...

அடிமை சங்கிலியை
அறுத்து விடு
உனை சுற்றி இருக்கு
தடைக் கற் சுவர்களை
உடைத்து விடு
உனக்கென ஒரு பாதை
அமைத்து விடு
அதில் சுதந்திரமாய் நீ
தலை நிமிர்ந்து நடந்து விடு...

பெண்ணுக்கு ஆணும்
அடிமை இல்லை
ஆணுக்கு பெண்ணும்
அடிமை இல்லை
அன்பை மட்டும்
உன்னை ஆள விடு
அன்புக்கு மட்டும் பணிந்து விடு...

கோழைகளை கண்டு பயப்படாதே
துரோகிகள் பேச்சுக்கு
காது கொடாதே
போகும் பாதையில்
நீ தடக்கி விழுந்தாலும்
எழுந்து நட ஒரு படிப்பினையோடு!...

கவி மீனா - ஜேர்மனி

## புதுவருடம்......

புதுவருடம் பிறந்துவிட்டது
அகமெல்லாம் மகிழ்வுதான்
தீமைகள் கிடைத்திடாமல்
நன்மைகள் பெருகட்டும்!...

ஏற்றத் தாழ்வுகள் ஒழிந்து
மாற்றங்கள் பல நிகழட்டும்
துன்பங்கள் விலகட்டும்
இன்பங்கள் மலரட்டும்!...

தாய் நிலத்தின் அவலங்களும்
நலிந்து ஒழிந்து மறையட்டும்
புது மனங்கள் மலர்ந்தே
நவ யுகமாய் படரட்டும்!...

புகலிட தேசங்களிலும்
தமிழர் வாழ்வு சிறக்கட்டும்
புதுமைகள் பல படைத்தே
நல்வாழ்வு தொடரட்டும்!...

அவலங்கள் தொலைந்து
பூமிப் பந்து எங்கும் இனிதாய்
வாழ்வு பெருகிச் சிறந்தே
மனித நேயம் பரவட்டும்!...

சிவா - ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள் மீது என் உறக்கம்...

whatapp இன் உன் வரிகள்
வரவில்லையென்றால்
வருத்தமுடன் வலிகள்
வருவதும் உண்டு!

குறும்பாக உன் வரிகள்
அரும்பாக என் ஆசையை
அடிக்கடி கிளறுவதுமுண்டு

அன்போடு ஒத்தடங்கள்
அப்பப்போ போட்டு
நிரப்புவதுமுண்டு!
அதனாலும் இன்ப அணைப்புகள்
தொடர்வதுமுண்டு

அற்புதமான உன் வரியில்
ஆங்கிலமும் இணைந்து
அடிக்கடி நடமாடுவதும்
காதலின் உணர்வை
இன்னும் கூட்டுகிறதே!

அன்பே உன் வரிகள் காயமான
என் வலிக்கு கடவுள் தந்த மருந்து
மாயமான இவ்வுலகில் மானிடத்தின்
காதல் மறைப்பதால் மறந்திடுமா?

உள்ளுக்குள் உன் இதயம்
உணர்வோடு துடிக்குது இங்கு
மெல்லமாய் நீ அணைக்கா விட்டால்
முள்மீது என் உறக்கம்
முடிவாகுது இப்போ!.......

## மின்னும் நட்சத்திரங்களாய்......

இருள் சூழ்ந்த வானத்தில்
இலங்குகின்ற நட்சத்திரங்களே!
இதமான உன் ஒளியே!
இதயத்தை கவருதிங்கு!
எட்டாத தூரத்தில் எழில் பரப்பாய்
எட்டி நின்று மின்னுவதும்
கிட்ட நிற்க நானும் ஓடி
எட்டி அடிவைப்பதும்
கிட்டாமல் போகுமோ?
என் உயிரின் வதனமே!
மின்னுகின்ற நட்சத்திரம் போல்
என் உயிரில் கலந்த பின்பும்
எட்டி நின்று பார்ப்பது முறையோ?
மின்னி மின்னி ஒளிர்வதெல்லாம்
உன் கண்ணைப்பறிக்கவன்று
கார்த்திகைத் தீபங்களாய்
காதலின் வரவு சொல்லவே!
சுட்டி விளக்கேற்றி சுந்தர தமிழ்பாடி
எட்டி நிற்கும் எழில் கோலம்
கொட்டி வைத்த மல்லிகையோ?
கோல எழில் வதனமோ?.........

திருமதி நகுலா சிவநாதன்
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படக் கவிதை (மண் இதழ்-180)

# வாழ்த்தியே ஒலிக்கும்!...

கரைந்துபோகும்வெண்பனியாகக் குளிர்காலத்தினையேவரவேற்கக்
காத்திருந்தமனங்களிடையே கவலையினைகார்த்திகை இறக்கியதோ..
புரைதட்டும் செய்தியினால் புவியில் புத்தாண்டும் நத்தார்விழாக்களும்
பூக்கத்தொடங்குமுன் உனதுடல் பூவாய் இம்மண்ணில் உதிர்ந்ததுவோ..?

இரைதேடும் பறவையாகஎங்கெங்கோஅலைந்துகல்வியைப்பெற்று
இறுதியில் கியூபாவைமீட்டிட இராணுவத்தினையேஉருவாக்கினாய்
அரைநூற்றாண்டுஆட்சிப்பொறுப்பிலிருந்தஆண்மகன் நீயொருவனாய்
அரசியல் சரித்திரமாகவே இந்தஅகிலமின்றுபோற்றிப் புகழுகிறது..!

நுரைதள்ளும் அலைகடலைத்துணிந்துநாதனமாய்த் தாண்டிவந்து
நூலளவும் பிசகிடாவண்ணம் நுட்பமாய்த் பலதிட்டம் தீட்டினாய்
நரைத்தஉன்னுடையதலைமுடியும் நரைத்திடாதஉறுதியுடனும்
நாட்டின் நலம் நாடியேநல்லனபலவற்றைநாற்றாய்பதியமிட்டாய்..!

கரையில்லாக் கல்வியினைகண்டிப்பாகயாவருக்கும்புகட்டிதயதனால்
கற்றர்வர்கள் எண்ணிக்கையைதேசத்தில் கணிசமாய் ஆக்கிவிட்டாய்
உரைகல்லாய் நீயிருந்துகியூபாமண்ணைஉயரத்துக்குஉயர்த்தி
உகந்தவேளையில் பதவியைத்துறந்துஉள்ளங்களில் உயர்ந்துவிட்டாய்..!

திரைபோடஅமெரிக்கஏகாதிபத்தியம்தினவெடுத்துமுயற்சித்தாலும்
தீட்டியதிட்டங்களால்பொருளாதாரத்தடையைதவிடுபொடியாக்கினாய்
நிரையாகஅணிசேராநாடுகள்குழவில்நீண்டகாலஉறுப்பினராயிருந்து
நிலையாகச் செயலராய் இருமுறைநிலைத்தவனும் நீயொருவன்தான்..!

விரைகின்றகாலவெள்ளம் அழத்திவரலாற்றினைப்பொறிக்கையில்
வியத்தகுமக்கள் தலைவனாய் உனைவிரும்பியேபதிவுசெய்யும்
வரைபோலஉயர்ந்தஉன்புகழினைவருங்காலம் உரைக்கையில்
வண்ணமாய் இணைந்தநட்பாய் சேகுவேராவுடன் வாழ்த்தியேஒலிக்கும்..!

--அம்பலவன்புவனேந்திரன்--



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மகளுக்கோர் தயவான விண்ணப்பம்!....

பொய்கையிலேநீராடி இந்தப் புவியிலெங்கும்நடந்துதமிழ்பேசி
போர்கடந்துபோனஇப்பூமியைக்காண இங்குபுறப்பட்டுவந்தவளே
கொய்துவந்தமலர்களுடன் உமைக் கும்பிட்டுநிற்குமெம்முடைய
குறைகளைத் தீர்த்துவைத்துகுலம் தளைக்கச்செய்திடுக.!
மையெழுதியகண்களுடன் எமைக்காணமதியொளியாய் வந்தவளே
மாற்றங்கள் இம்மண்ணில் மலர்ந்திடமார்க்கங்களைக் காட்டிவிடு
பொய்யர்களின் பூமியிலேபுதைபடுகின்றநியாயத்தைநிமிர்ந்திட
போகியாகப் பொய்மையைப்பொசுக்கிவாய்யாமையைஉயரச்செய்திடுக..!
பைககளிலேஅரிசியில்லைபழம் பாக்குடன் வெற்றிலையுமில்லை
பாழாய்ப்போன இம்மண்ணில் உயிர்கள் பசிபோக்கவழியுமில்லை
மெய்யெல்லாம் வேதனைகளையும் மேவிவிட்டபிணிகள்தாக்கிட
மிதக்கின்றகருகுகளாய் மந்தைகளைப்போல்அலைகின்றோம்..!
தைமகளேநீவருகின்றநல்லதருணத்தினைநாம் எதிர்பார்த்து
தங்கியிருக்கும் ஜீவன்களுடன் தவம்கிடப்பதனைநீயும்அறிவாயா
கொய்துசென்றஉயிர்கள்கோடியம்மாகுவலயம் இதையறியுமம்மா
குன்றிப்போனநீதிகிடைக்ககொடியவயவரிடம் எமைக்காத்திடுக.!
கைவிலங்குடன் அழைத்துச்சென்றவர் கதைகள்ஒன்றும் தெரியவில்லை
காலங்கள்தான் கரைகின்றனஎம்கண்மணிகளைகவனமாய் மீட்டுத்தா
பையவேபசியைப்போக்கிட்டஎமதுபாரம்பரியநிலத்தைமீட்பதற்காய்
படாதபாடுபட்டஎம்பட்டினிச்சாவுகளைபார்த்தபின்னும் இரங்கிடாயோ..?
வெய்யிலும் மழையும் இங்கேவேகமாய்வீசியடிக்கின்றபனிக்காற்றும்
வெந்தபுண்ணில் வேலாகவேவீரியமாய்த் தைப்பதைத் தடுத்திடம்மா
தெய்வங்களும் துணையில்லைஎம்மைத் தேற்றுவதற்கும் நாதியில்லை
தீவடங்கும் ஓடுகின்றோம் இன்னல் தீர்வதற்குவழியொன்றுமில்லை..!
செய்வதாகஉறுதியளித்துச் சென்றவர்கள் மாயமெனமறைந்தார்
சீட்டுக்கட்டாய் வாக்குப்பெற்றுச்சிம்மாசனங்களில் அமர்ந்துவிட்டார்
பைகளைஅவரவர்நிரப்பிக்கொண்டுமிகப் பத்திரமாய் வாழகின்றார்
பட்டினியாலும் பிணிகளோடும் பாதுகாப்புமிழந்துநாம்மாழகின்றோம்..!
நெய்விளக்குஏற்றவைத்துநாம் நித்தியபூஜைசெய்தஆலயங்களை
நிவர்த்திசெய்துஎம்பாட்டனின் நிலங்களையும் இனிமீட்டுத் தருவாயா
தைமகளாய் உன்னுடையதயவைத்தான் நாம்எதிர்பார்த்திருக்கிறோம்
தமிழர்மேல் கருணைவைத்துதாய்மண்ணைமீட்டுக்கொடுத்திடுதாயே..!

அம்பலவன்புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னித்தமிழ்காணும் கவிதைகளும் பாடல்களும்.......

காவலூர் எஸ் பாலமோகன் - ஜேர்மனி

அற்புதமான கட்டுக்கோப்புக்களாலும் அளவிடமுடியாத இலக்கிய வடிவங்களாலும் தலைநிமிர்ந்து நிற்கும் உன்னதமான மொழிகளில் எம் தாய்மொழியும் ஒன்றாகும். காலத்தின் சுவடுகள் நிறைந்துவிட காலப் பொக்கிஷங்களும் காலங்களின் நகர்வுகள் தந்த கருத்துக்களின் நிறைவுகள் இவைகளைச் சுமந்து ஞாலத்தில் நிமிர்ந்து நிற்கும் அழகு தமிழ் மொழிக்கு உண்டு. காலத்திற்கேற்ற சிந்தனைகளும் புதுமைகளும் மொழியியலில் ஏற்படுத்திய பசுமைப் புரட்சிகள் அதன் வரம்புகளைத் தாண்டியிருக்கலாம். ஆனால் தகர்ந்துவிடக்கூடாது. இதயத்தில் மொழியைத் தாங்கியவர்கள் தம் உதிரத்தால் அதற்கு உயிர் ஊட்டியவர்கள் தந்த அந்த அற்புதமான படைப்புக்களைப் புதுமை என்ற சூறாவளிகள் சூனியமாக்கிவிடக்கூடாது.

உள்ளத் துள்ளது கவிதை
இன்பம் உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த மொழியில்
உண்மை தெரிந்துரைப்பது கவிதை..

என்றார் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள். காலங்களைக் கடந்து இலக்கியங்களை வாழவைக்கும் வலிமை கொண்டது கவித்துவம். காதல், வீரம் என எழுந்த சங்ககாலம் வீரமாக நின்ற புறனாநூற்றுக்காலம், திருக்குறள், நாலடியார் என விரிந்து நின்ற அறிவுரை கூறும் காலம், தேவாரங்களாகி நிறைந்த சமயகாலம், பின்னால் புதுமைப் புரட்சி நடாத்திய பாரதியின் காலம் இப்படியாகக் கவித்துவம் பசுமையாகப் பவனிவந்த அழகு அற்புதமானதுதான்.

உள்ளத்தில் உதித்த உணர்வுகளை, உயர்வுதரும் கருத்துக்களைக் கன்னித் தமிழோடு கலந்த அழகுக் கவித்துவத்தின் செய்யுள்களைச் சிறப்படைய வைத்தது. எழுத்து, அசை, சீ, தளை, அடி, தொடை என்ற ஆறு உறுப்புகளும் அமைந்து சிறப்புப்பெற செய்யுள்கள் ஓசை வேறுபாடுகளுக்கு அமையப் பாடலாகி விரிந்தபோது வெண்பா, ஆரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்ற நான்கு வகைகளில் சிறந்து விளங்குகின்றது.

கவித்தவத்தின் உருவம், உணர்ச்சி, கற்பனை, கருத்து இவைகள் அனைத்திற்கும் தெளிவான வரைவிலக்கணங்களை அமைத்தது தமிழ் இலக்கணம். சங்ககால இறுதியிலேயே பாடல் வடிவம் சிறப்புப் பெறத் தொடங்கியது. ஓசைநயம் இசையோடு இணைந்து இனிமையான குரலோடு சேர்ந்தபோது உள்ளங்களை உருக்கிய அழகும் அற்புதமானதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை இனிமையான குரலாகி
அசைய வைத்தது.
ஓசை நயம் உணர்வுகளை
விழிக்க வைத்தது.....

பாரதியின் புதுமைப் புரட்சியின் பின் மரபுக் கவிதைகளின் கட்டுக்கோப்புகளில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அறுபதுகளில் புதுக்கவிதைகளாகிப் பொலிந்தது. பிரான்சு இலக்கியங்களில் பிறந்து ஆங்கில இலக்கியங்களில் வளர்ந்த இந்த வடிவத்தைத் தமிழும் தழுவிக்கொண்டது.

யாப்புகளைத் தழுவாத சுய யாப்புக்கொண்ட இந்தக் கட்டில்லாக் கவிதைகள் எடுத்த விடையங்களில் இனிமை, எளிமை, சுருக்கம், தெளிவு இவைகளோடு கலந்து சமூகத்தின் சாதாரண குடிமகனின் உணர்வுகளோடும் உறவாடிய அழகு உன்னதமானது. இன்று இவைகளில் நிலவும் தெளிவின்மை புதுக்கவிதையைப் புரிந்துகொள்ளாத உரைநடையின் உடைந்த வரிகளின் தரிசனங்களையும் காலங்கள் மனதில் பதித்துவிட்ட மரபுக் கவிதைகளின் ஆளுமையினால் இரண்டிற்கும் இடையே விழுந்துவிட்ட கவித்துவத்தின் தவிப்புக்களையும் தரிசிக்க வைக்கிறது.

வெண்பாவகைகளில் வரும் பாவிற்கும் இன்றைய பாடல்களுக்குமிடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. பாடல்கள் சந்தங்களுக்கு அமைய எழுதப்படுபவை இசை குரலின் இனிமை இவையோடு இணைந்து இதயத்தை மகிழ்விப்பது.

கவிதைகள் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உன்னதமான வரிகள். இவை இதயத்தின் உணர்வுகளோடு உறவாட நினைப்பவை. இங்கே மேத்தா சிற்பி அவர்களின் சில அருமையான கவிதை வரிகளை ஒரு முறை தரிசிக்கின்றேன்...

## உள்ளே அறைக்குள் நான்

ஓய்ந்தபொழுது பட்டொளிவீசும்
பௌர்ணமி நிலவு சின்ன யன்னலிலே
சிறைபட்டுக் கிடந்தது
கதவைத் திறந்து
வெளியே நடந்தேன்
வெள்ளி நிலவுக்கும்
விடுதலை கிடைத்தது....

முதல் தேதிச் சக்கரவர்த்திகள்
மாதநடுவில் மன நோயாளிகள்
கடைசிவாரம் தத்துவஞானிகள்...

தேர்ந்தெடுத்த போது
கையைக் கடித்தது
அதுவும் போதாதென்று
காலையும் கடிக்கிறது செருப்பு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இசையாகும்போது எடுத்துக்கொண்ட உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளத் தவறிவிடுகின்றது. கவித்துவம் மனித மனங்களில் ஆட்சி செய்ய விரும்பும் பகுதிகள் வேறு. இசை ஒரு மனிதனை ஆக்கிரமிக்க நினக்கும் பகுதி வேறு.

இவை இரண்டிற்குமிடையே தெளிவான வேறுபாடுகள் உண்டு. மரபுக் கவிதைகளையோ சந்த அமைப்புக்களுக்கு உட்பட்டு மரபுக் கவிதைகளோடு உறவாடும் வரிகளையோ பாடலாக்குவது சுலபம். ஏன் ஒரு இசைஞானியால் எல்லா வரிகளையுமே பாடலாக்கிடவும் முடியலாம். இருந்த போதும் இங்கே இவைகளின் சுவையும் ரசனையும் வேறுபட்டே விடுகின்றது. புதுக்கவிதைகள் பாடலாக நினைக்கும்போது இந்த இலக்கிய வடிவங்கள் தாம் எடுத்துக்கொண்ட கவித்துவத்தை இழந்து விடுகின்றன.

ஆங்கில மொழியில் poem என்பது வேறு Song என்பது வேறு. (Gedicht-Lied) கவிதை-பாடல் இந்த இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் ஜேர்மனி மொழியில் தெளிவாகவே உள்ளது. Schiller Goethe போன்ற சிறந்த காலத்தால் அழியாத ஜேர்மனியக் கவிஞர்களின் படைப்புக்களும் Mozart, Beethoven போன்ற புகழ்பெற்ற ஜேர்மனியப் பாடலாசியர்களின் படைப்புக்களும் தெளிவாகவே வேறுபட்டு நிற்கிறது. தமிழ் மொழியில் இலக்கண வரம்புகள் தெளிவாகவே அமைந்தபோதும் கால காலமாகக் கவித்துவத்தை இசை மெருகுபடுத்தி நின்றதாலோ இடைக்காலத்தில் பாடல்களை எழுதியவர்களின் பாபநாசம் சிவன் போன்ற ஒரு சில மேதைகளைத் தவிர பலர் கவிஞர்களாக இருந்ததாலோ என்னவோ நாம் மட்டும் இந்த அடிப்படைகளைத் தொலைத்துவிட்டு அலைவது வேதனைக்குரியதுதான்!...

---

## உச்சம் தொடு.......

உச்சம் தொடு--
வெற்றி நிழல் தொட்டிடாத
எண்ணத்தின் சிறகு
இலட்சியமும் குறிக்கோளும்
கொள்கையெனும் இலக்கு
முடியுமென முயல்கின்ற
முத்திரையின் உலகு
நாளையென நம்பிக்கை
விதைகொண்டவிதைப்பு
ஏற்றமென ஏற்றி வைக்கும்
ஏணி கொண்ட வலிமை
எதற்குமே முதலீடு
தன்னம்பிக்கையின் பதிவு
அச்சமதை அகற்றி வைத்து
ஆற்றலைச் செதுக்கு
அவனியிலே ஊற்றெடுக்கும்
வெற்றி நிலை உயர்த்து.

வசந்தா ஜெகதீசன்-ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறையில் பார்த்த உண்மை சம்பவம்...

திருமதி கலைவாணி ஏகானந்தராசா
ஜேர்மனி

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்தோம். தெரிந்தவர் ஒருவர் எமது பயணத்துக்கான தனியார் வாகனம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார். அந்த வாகனத்தில் வரும்போது அவருடன் அவரது வாழ்க்கை கஷ்ட நஷ்டங்கள் பற்றியும், நாட்டுநிலமைகள் பற்றியும் உரையாடியபடி பயணித்தோம். நாம் வெளிநாட்டில் இருந்து வந்ததைப்பற்றியும் வவுனியாவில் நாம் செய்த பணிகள் பற்றியும் அளவளாவிக்கொண்டோம்.

அப்பொழுது அந்த வாகன ஓட்டுனர் எம்மை பார்த்து உங்களைப்போல் இரக்க சிந்தையுள்ள சிலரே இப்படியான கைங்கரியங்களைச் செய்கின்றனர் சிலர் அங்கிருந்து கொண்டுவந்த பணத்தை ஆடம்மரமாக செலவுசெய்து இங்குள்ள ஏழை மக்களுக்கு தங்கள் பகட்டை காட்டிவிட்டுச் செல்கின்றனர் என்று கூறினார். அன்றாட உழைப்பில் கஷ்டப்பட்டுவாழும் குடும்பங்கள் பலவற்றை பார்த்துத் தான் வேதனைப்படுவதாகவும் அதனால் தன் உழைப்பில் சிறிது பணத்தை தான் சேமித்துப் பக்கத்தில் உள்ள ஒரு வறிய குடும்பத்துக்கு உதவுவதாகவும் கூறினார்.

அந்த ஓட்டுனருடைய வருமானத்தைக் கேட்டபோது அதிர்ச்சியடைந்தேன். ஆனாலும் அவர் மனிதநேயத்தை மனதாரப்போற்றினேன். அவர் எம்மிடம் அந்த குடும்பத்தின் வறுமை நிலை பற்றி கூறினார். மூன்று வயதிலிருந்து பதினைந்து வயதிற்குள் ஐந்து பிள்ளைகள் . நன்றாக வாழ்ந்த குடும்பம் இடப்பெயர்வுகளின் பின் எல்லாம் இழந்து மிகக் கஷ்டப்படுவதாக கூறினார். தாய் தந்தை பற்றி விசாரித்தபோது தந்தை தொழில்நுட்பக் கல்லூரியில் படித்தவர் ஆயினும் தொழில் வாய்ப்பு கிடைக்காதமையால் நாள் கூலி வேலையே செய்துகொண்டிருக்கிறார் என்றும் தெரிவித்தார். இன்றைய நிலையில் பிள்ளைகள் சாப்பாட்டுக்கு வழியின்றி வருந்துவதாக குறிப்பிட்டார்.

அந்தக் குடும்பத்தை சென்று பார்த்த போது வறுமையின் உச்சம் தெரிந்தது. நான்கு அரைச் சுவர்கள் மட்டுமே அந்த வீடு என்பதை அறிவித்தது. பாடசாலை சீருடையை இருவர் மாறி மாறிப் பாவிப்பதும் விளையாட்டுப் பாடத்தக்குரிய சப்பாத்தை மாறி அணிவதாகவும் அதனால் பாடசாலைக்கு ஒழுங்காகப் போக முடிவதில்லை என்பதை அறிந்த போது மிக மன வருத்தமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கல்விக்கு தேவையான எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்ததுடன் உணவுக்கான ஒழுங்குகளையும் செய்து கொடுத்தோம். அப்போது தான் இரண்டாவது பெண்பிள்ளையின் கண்களில் நீர் வடிவதை கவனித்தோம் அவர்களிடம் விசாரித்தபோது "சிறுபிள்ளையாக இருந்த போது கண்ணில் ஈர்க்கு குத்தியதால் அந்தக்கண்ணில் பார்வை இல்லை" என்று கூறினார்கள். யாழ்பாண வைத்தியசாலையில் காட்டியபோது ஒரு இலட்சம் ரூபாவுக்கு லென்ஸ் வைக்கவேண்டுமாம் அதனால் கைவிட்டுவிட்டோம் என்று கூறினார்கள்.

அப்பிள்ளையை வேறு வைத்தியரிடம் காட்டினோம் 15 ஆயிரத்துக்கு லென்ஸ் போடலாம் என்று கூறினார். அதற்கான பணத்தைக் கட்டிவிட்டு வந்தோம். இன்றுவரை சிகிச்சை நடைபெறவில்லை. ஒவ்வொரு முறையும் வைத்தியசாலையில் அனுமதிப்பதும்வீட்டுக்கு அனுப்புவதுமாக நாட்கள் நகர்கின்றன. அதிலும் கடைசித்தடவை வைத்தியர் கூறியுள்ளார் மறுமுறை வரும்போது இரண்டு லென்ஸ் வாங்கிவரும்படி அதில் எது பொருந்துகிறதோ அதனை வைத்துவிட்டு மற்றையதை திரும்ப கொடுப்பதாக. மற்றைய லென்ஸ்க்கும் கண்மருந்துக்கும் மீண்டும் 20 ஆயிரம் அனுப்பிவைத்தோம். என்ன நடக்கும் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். இதில் ஒரு உண்மை என்னவென்றால் லென்ஸ் விற்கப்படுவதும் வைத்தியரின் தனிப்பட்ட வியாபாரஸ்தலமே என்பதாகும். எப்படியும் அந்தப்பெண்ணுக்கு பார்வை வந்தால் போதும் என்பது எமது ஆவல். வைத்தியர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது தமிழர்களின் நிலை பரிதாபத்துக்குரியதாகவே காணப்படுவது வேதனைக்குரிய விடையமாகும்...

-----------------------------

## தேர்தல்கள்...

இந்த ஆண்டு நடைபெறவுள்ள சில முக்கிய தேர்தல்கள்...

15.03.2017-நெதர்லாந்து பாராளுமன்றத் தொர்தல்
23.04.17-பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல்
17.09.2017-ஜேர்மனி பாராளுமன்றத் தேர்தல்

26.03.2017-ஜேர்மனி Saarland மாநிலத்தேர்தல்
07.05.2017-ஜேர்மனி Scheswig Holstewin மாநிலத்தேர்தல்
14.05.2017-ஜேர்மனி Northeim Westfalen மாநிலத்தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்!..

**எம்.ஜி.ஆர் என்ற மாமனிதனின் நூறாவது பிறந்தநாள்**
**17.01.1917**

ப.பசுபதிராசா - ஜேர்மனி

தமிழ்நாட்டின் திரைப்படத்துறையிலும் அரசியல் அரங்கிலும் ஈடு இணையற்ற தலைவனாக்வும் கதாநாயகனாகவும் முதலமைச்சராகவும் திகழ்ந்த மக்கள் திலகம் என்றும் புரட்சித்தலைவர் என்றும் பல்வேறு அபிமானப் பட்டங்களால் அன்புடன் மக்கள் மனதில் இடம்பிடித்தவர்தான் எம். ஜி.இராமச்சந்திரன் என்ற மாபெரும் மனிதர். இந்த மனிதன் 17.01.2017ம் தேதியில் நூறு வயதை எட்டிப்பிடிக்கும் போது பேரிய மகிழ்வுதான். நேர்மையாகவும் உண்மையாகவும் சொல்வதைச் செய்வதில் சத்தியவானாக நின்று உழைத்து மன்னாதி மன்னனாக, மக்கள் போற்றும் காவித்தலைவனாகவும் இந்த இயற்கை இதயம் கனிந்து இனிமைப் பரிசு தரும் என்ற உண்மைக்கு உயிரூட்டி வாழ்ந்தவர் இவர். "கருணை இருந்தால் வள்ளலாகலாம், கடமை இருந்தால் வீரனாகலாம்," "பொறுமை இருந்தால் மனிதனாகலாம் இந்த மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்" என்ற வாய்மொழி சொன்னவரையே வரலாறு தலைவனாக மக்கள் கையில் கொடுத்தது உண்மையின் ஆச்சரியம்.

சினிமா என்பது வெறும் பொழுது போக்கு ஊடகம் என்ற நிலையை மாற்றி, சமூக மாற்றத்திற்கும், மக்கள் மேம்பாட்டிற்கும் உரிய, உயரிய அம்சங்களையும் வளர்க்க ஏற்ற சாதனம் என்பதை நிரூபித்து உலகில் சினிமாவிலிருந்து முதல் நாடாளும் மன்னனாக, முடியாததை முடித்துக் காட்டி ஆடிசூடிய முதல்வன் என்றால் அது எம் ஜி ஆர்தான். இவர் கல்வி கற்றது குறைவாக இருந்தாலும் திறமையானவர்களின் திறமைகளைக் கண்டுபிடித்து, மிகநுட்பமாகப் பயன்படுத்தி அவர்களின் படைப்புக்களையே தன் கொள்கைக்கு உரிதாக்கி வெற்றிகண்ட மாபெரும் சாணக்கியன். இந்தியாவில் அதிகம் படித்த பேர்வழிகளே இவரின் உண்மைத் தொண்டனாக ஆயிரமாயிரமாய் திகழ்வதும் அவர்களின் புத்தி கூர்மைக்கு ஏற்ப அவர் படித்தவர்களைக் கையாண்ட விதமும் அரசியல் வித்தகர்களாலே அதிகம் பாராட்டப்பட்டவை என்பதற்கு இன்றும் (2016வரை) தன்கட்சியை தனக்குப்பின்னே வழிநடத்திச்செல்ல அரசியல் வாரிசாக காலம் சென்ற ஜெயலலிதாவை நியமித்தார் என்ற ஒரு ஆதாரமே போதுமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஜி.ஆர் சிறந்ததோர் பகுத்தறிவுவாதி, பொது உடமைச் சித்தாத்தங்கள் மீது அளப்பரிய ஆர்வம் கொண்டவர். ஆனால் அக்கொள்கைகள் எல்லாம் அடிமட்ட மக்களைச் சென்றடைய அவர் கையாண்ட வழிமுறைகள். ஆச்சரியம் மிக்கவை. இன்னும் சிறப்பாகத் தான் கடந்துவந்த பாதைகளின் கஸ்ட நட்டங்களை, துன்பமான சூழ்நிலைகளை மறந்துவிடாமல் அதை மக்களுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு ஏழ்மைமிக்க பந்தங்களை உயர்த்திவிடவும் ஊக்கப்படுத்தவும் அவர் பின்பற்றி வந்த திட்டங்கள் அன்றும் இன்றும் என்றும் அவர் மறைந்தும் மறையாத செல்வாக்கினை மக்கள் மனதில் ஏற்படுத்திவிட்டது. அவர்மீது விமர்சனம் வைத்தவர்களைக்கூட, அவர்களின் எண்ணத்தில் நியாயம் இருப்பின் அவைகளையும் நிராகரித்து விடாமல் எதிரிகளையும் ஆதரித்து ஜனநாயக வழியில் அனைவரையும் அணைத்து ஆட்சிசெய்து சொக்க வைத்தவர் எம்.ஜி.ஆர்.

இன்றும் என்றும் தமிழ்ச்சமூக முரண்பாடுகள், சாதிய, ஆதிக்க உணர்வுகளின் பாதீட்டை துல்லியமாகப் படம்பிடித்துத் தனித்து நின்று எதிர்ப்பதை நிஜமாகவே எதிர்க்கும் வல்லமைக்குள், பாதிக்கப்பட்டுப்போன மக்கள் தங்கள் ஆற்றாமையை ஆற்றிக்கொள்ளும், தொட்டுத்துயர் ஆறி நிற்கும் சூட்சும மந்திரமாக திரு.எம்.ஜி, ஆர் அவர்களை மக்கள் பார்த்தனர். ஒரு சாமான்யனைக் கவரும் அவர் யுக்தி இனி ஒருவருக்கும் வராது. தான் கஸ்டப்பட்டு உழைத்த பணத்தை, அந்தப் பணம் வந்த விதத்தை, அது திரும்பச் சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்து அப் பலம் செய்ய வேண்டிய தேவைகளை நன்கு உணர்ந்து செயற்பட்டதாலேயே எட்டாவது வள்ளலாக உயர்ந்தார்.

குறிப்பாக கடவுள்என்னும் கருப்பொருளை அப்படியே வைத்துவிட்டு அதைப்பீடித்திருக்கின்ற புல்லுருவித்தனத்தைத் தோலுரித்துக் காட்டுவதன் மூலம் தான் கொண்டாடிவந்த கொள்கையை நியாயப்படுத்தினார். இந்த மெய்யியல் படித்த அறிவை உலகமும் கைதட்டி வரவேற்றது. அது மட்டுமல்ல எப்பொழதுமே இதிகாச புராணங்களின் வாயிலாக இந்துக் கடவுள்கள் இரத்தம் பாச்சப்பட்டு அடிமைத்தனங்களுக்குள் மூழ்கிய மக்களுக்கு மறுமதங்களின் பார்வையையும் தன் சினிமாவின் மூலம் தெளிவாக்க பாத்திரமேற்று நடித்தாரேயன்றி அக்கடவுள்கள் குறித்துச் சார்ந்து நிற்காது பார்த்துக்கொண்டார்.

"தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்கொரு தாய் இருக்கின்றாள் என்றும் என்னைக் காக்கின்றாள்" என்று இயற்கை தன் துணைக்கரமாகத் தந்த தாயே இந்த உலகில் பிரமம் என்று அவர் தாய் மீது கொண்ட பேரன்பை சமூகப் பலமாக்கிப் பொதுவாகத் தமிழ்மகன் ஒருவனின் தாய்மீது கொண்ட அபிலாசைகளையும் தன் பலமாகத் திரட்டினார். "எந்நன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செந்நன்றி கொன்ற மகர்க்கு" என்னும் வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாத பண்பினைக் கடக்கும் ஒவ்வோர் கணத்திலும் தூக்கிச் சுமந்தவர். தன் வாழ்வில் தன்னை உயர்த்துப் பாடுபட்ட ஆதரவுதந்தவர்களின் நாமங்களை மனதில் வைத்து வீடு தேடிச்சென்று பதில் நன்றி செலுத்தி வணங்கும் குணமே அவரை எவரும் தரிசிக்கும் கோபுர உச்சத்தில் அமர்த்தியது.

திரு இராமச்சந்திரன் ஒரு திடமான எதிர்காலம் அரசியலில் தனக்கு உண்டு என்று நினைத்தே தன் காய்களை நகர்த்தினார். அதற்கான காலமும் நேரமும் அவரைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து கலைஞர் கருணாநிதி தூக்கி எறிந்ததன்மூலம் உருவாக்கிக் கொடுத்தது. "தழவும் நிலவாம் தங்கரதம் தாரகை பூர்த்த மணிமகுடம்" குயில் பாடும் கலைக்கூடம் கொண்டது எனது அரசாங்கம்" என்று கனவுகண்ட எம் ஜி ஆர் குறைந்த பட்சம் அதை நிறைவேற்றிக் காட்டவே முயன்றார். மது, புகை, சூதாட்டம், பெண்கள் என்ற தீய பழக்கங்களைக் காட்சிக்குக்கூடக் காட்டாமல் அதை நடைமுறை வாழ்விலும் கடைப்பிடித்ததால் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஆண்ணாதுரை அவர்களின் தலைமையினை ஏற்று அக்கழகம் வீறுநடைபோட மிகப்பெரிய பங்கினை வகித்ததுடன் அக்கட்சியின் திராவிட நாடு, தமிழ்த்தேசியம், சாதியத் தகர்ப்பு, புகுத்தறிவு, தமிழ்மொழிக் கொள்கைகளைப் பரப்பும் பிரச்சார நடவடிக்கைகளைத் தன் திரைப்படங்களின் வாயிலாக முன்னெடுத்தார். இவரின் ஆரம்பகால அரசபடங்கள் யாவும் தமிழ்த்தேசியம் தமிழ்மொழி பற்றிப் பகரவும் சமூகச்சித்திரங்கள், பகுத்தறிவு, பொதுவுடமை என்பன குறித்துப் பேசுவதும் யாவரும் அறிந்தவையே. கவிஞர் கண்ணதாசனும் எம் ஜி ஆர் அவர்களும் சேர்ந்து நம் வரலாற்றுப் பெருமை கூறும் பல படைப்புக்களைத் தந்தருளினர். அவையாவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிப் படிகள் என்பதே உண்மை.

திரு எம்ஜிஆர் அவர்களின் வாழ்க்கையில் "நாடோடி மன்னன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படம் மறக்கமுடியாத மைல்கல். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு..சிறு பாத்திரமேற்று நடித்த அவர் தன் சக்தி எல்லாம் சேர்த்துப் பெரும் பொருட் செலவில் தன் எண்ணத்தை மக்களிடம் கொட்டிச் சொன்ன கொள்கைக் காவியம் அது. இப்படம் தோல்வியானால் நாடோடி என்றும் வெற்றிபெற்றால் மன்னன் என்றும் ஆரூடம் கூறப்படும் அளவுக்கு அதன் முக்கியத்துவம் விளங்க அப்படம் வெற்றிபெற்று மன்னனானது சுவாரசிகம். மக்களுக்கு எது சொன்னால் பிடிக்கும் என்று மக்கள் மனமறிந்து செயற்படும் செயல்வீரன் அவர்.

இனி அவர் படங்கள் யாவுமே கருத்திலும் தலைப்பிலும் ஒரு பாடமே சொல்லும் வசீகரம் நிறைந்தவையே. அவருக்கு வழங்கிய பட்டங்கள் பதவிகள் யாவும் மிகவும் பொருத்தமானவையே. அவரை வாத்தியார் என்று சொல்வதிலுள்ள நெருக்கம் தமிழ் மக்களுக்கு நேசநெருக்கம் அதிகம்.

அவர் தன்னந்தனியாக நின்று மிகப்பெரிய சவால்களை முறியடித்து அவரை எதிர்த்தவர்களைவிட மாபெரும் வெற்றிகளைக் குவித்தார்."தோளுக்கு வீரம் உண்டு தோற்காத ஞானம் உண்டு" என்ற அவர் யுத்தி இயற்கை அளித்த இனியபலம். வரலாற்றில் எத்தனையோ கஸ்டங்கள் அவர் சகபாடிகளுக்கு நேர்ந்தபொழுது உணர்ந்து உதவிய மிகப்பெரிய தெய்வ மனிதன் அவர் பட வசனத்தில் வாய்மையின் நீட்சி உன்னதமானது. எண்ணாக் கொடைச் சிறப்பிலும் மிகவும் உன்னதமானது ஈழத்தமிழரின் சுதந்திர வேட்கைக்கு அவர் நீட்டிய அன்புக்கரம் அவர் அன்று வழங்கிய பணபுலத்திலும் கணபலத்திலும்தான் முப்பது வருடகாலம் ஈழத்தமிழர் அங்கீகாரத்தைத் தவிர முழுமையான ஒரு ஆளுமையை நாம் கொண்டிருக்க அத்திவாரமிட்டது.

அவர் இன்று இருந்திருந்தால் இந்த வீழ்ச்சியை நம் விடுதலைப் போராளிகள் அடைந்திருக்கமாட்டார்கள். அந்த நன்றியோடு இந்த மாமனிதனை நாம் நினைவு கூருவதோடு, அவர் காட்டிய அகிம்சை வழியில் நின்று, அறிவாயுதம் ஏந்தி, இரத்தம் சிந்தாத புரட்சியை முன்னெடுப்பதே இரத்தின் இரத்தத்திற்கு நாம் செய்யும் மாபெரும் மரியாதையும் மாண்பும் எனலாம்.

உலகவரலாற்றில் அவர் ஏழைப் பிள்ளைகளுக்காய் கொண்டுவந்த சத்துணவுத்திட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவள மேம்பாட்டுக் கழகத்தால் மிகவும் பராட்டப்பட்டது. இன்றும் நடைமுறையில் இருக்கும் இத்திட்டத்தால் பயன்பெற்ற கோடானகோடி பிள்ளைகளின் ஆத்ம ராகத்தால் அவர் என்றென்றும் பூமியில் வாழ்துகொண்டிருப்பார். வாழ்க அவர் நாமம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 5 | 7 | 1 | 9 | 3 | 8 | 2 |
| 3 | 2 | 9 | 4 | 6 | 8 | 7 | 1 | 5 |
| 7 | 1 | 8 | 2 | 3 | 5 | 9 | 6 | 4 |
| 5 | 4 | 6 | 3 | 7 | 2 | 8 | 9 | 1 |
| 8 | 3 | 1 | 5 | 9 | 6 | 2 | 4 | 7 |
| 2 | 9 | 7 | 1 | 8 | 4 | 6 | 5 | 3 |
| 6 | 7 | 3 | 9 | 4 | 1 | 5 | 2 | 8 |
| 1 | 8 | 2 | 6 | 5 | 3 | 4 | 7 | 9 |
| 9 | 5 | 4 | 8 | 2 | 7 | 1 | 3 | 6 |

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| கா | து | லை | ர் |
| ந் | கூ | டை | வ |
| து | ரு | ட் | லை |
| ம் | ஆ | ச | பு |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | ப் | பொ | ங் | க | ல் | க |
| ரி | வா | வி | கா | ரை | ர | ரா |
| ய | னி | ம் | த | ர | வி | ம் |
| ம் | ஜெ | ய | ல | வி | தா | பு |
| ட | சை | ச் | ர் | ச | மே | ஸ் |
| ட் | பு | லி | சா | ஞ் | பா | ப |
| னி | லா | ல் | ம | அ | க | ம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளி விதை



வீக்கம் அதிவாந்தி னேனி வலி வாய்வுந்
தாக்கு நரம் பின் குத்தல் தொல்லழலை - ஓக்காளம்
மீளியரிசி விதை வாதமும் போக்கும்
ஆளி விதை தன்னால் அறி - ( அகத்தியர் குணவாகடம் )

இந்த ஆளி விதை என்றால் என்ன என்று நெடு நாளாக தேடிக் கண்டு பிடித்தால் அது இங்கு காணபடுகின்ற leinsamen ( Flax seed ) என்னும் சிறு விதைகள்தான், இந்தத் தாவரம் ஒரு மூலிகை இனத்தைச் சேர்ந்தவையாகும், மூலிகை என்றாலே நோய்களை குணப்படுத்த வல்லது என்பதே பொருள் படும், இதன் பூ, இலை, வேர், விதை யாவுமே நல்ல மருத்துவத் தன்மை நிறைந்ததாக அகத்தியர் அவரது குணவாகடம் என்னும் நாலில் எழுதி வைத்துள்ளார்.

பாபிலோனியர் கிமு 5000 ஆண்டுகளுக்கு முன்னரேயே இதன் மகிமையை உணர்ந்து பயிர் செய்துள்ளதாக தெரிகிறது,மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்து இந்தியா வரை இதன் பயிர்ச் செய்கை வளர்ந்துள்ளது. ஆளி விதையானது வயிற்றுப் பொருமல், அசீரணம், மண்ணீரல் வீக்கம், வாதம், சருமரோகம், மலச்சிக்கல் இப்படிப் பல நோய்களைக் குணப்படுத்தும் என்று சொல்லப்படுகிறது ஆனால் கர்பிணிப் பெண்கள் இதை உண்பதை தவிர்பது நல்லது காரணம் ஆரம்பக் கருவை கலைக்கப் பார்க்கும் என்று நான் இல்லை அகத்தியர் அவரது மருத்துவ நாலில் கூறியுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளி விதைகளை நாம் இங்கும் வாங்க கூடியதாக இருப்பதால் அதனை வாங்கித் தயிர் அல்லது நீரில் ஊறவைத்து உண்ணலாம், இந்த விதையை பொடியாக்கியும் எந்த உணவுடனோ, பாலுடனோ, சீனி கலந்தோ கூட சாப்பிடலாம் இது சுவையற்றது எனினும் பலன் நிறைந்த ஒரு விதையாகும்.

உலகத்திலுள்ள சக்தி வாய்ந்த விதைகளில் இந்த ஆளி விதை முக்கிய இடத்தை பெறுகிறது என சொல்லப்படுகிறது, இந்த விதை மேலும் இதய நோய், புற்று நோய், வலிப்பு, நீரிழிவு நோய் போன்றவற்றிற்கும் அரு மருந்தாகிறது என்று அறிந்த பின்பும் இதை நாம் பயன் படுத்தாமல் விடலாமோ? இதில் ஓமேக ( 3 ) இருப்பதால் இதய நோயை வராது தடுக்கின்றது, இதில் தாது உப்புக்களும், நாரச் சத்தும் நிறைய உள்ளதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்,

இது புற்று நோய் வராது தடுக்க உதவி செய்வதுடன் நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்திலுள்ள சக்கரையின் அளவை கட்டுப்படுத்துகிறதாமே!

இது இரத்தக்குளாய்களில் படிகின்ற கெட்ட கொழுப்புக்களை கரைத்து நல்ல கொழப்பை உடலுக்கு சேர்கிறது இதனால் இரத்தக்குளாய்கள் சுத்திகரிக்க படுகின்றன. இத்தனை நன்மைகளை எமது ஆரோக்கியத்துக்காக செய்கின்ற இந்த ஆளி விதை நமக்கு உண்மையான ஊழியனாய், நண்பனாய் இருப்பது போலே நமது அடுப்படியில் இருப்பதுடன் தினமும் எமது உணவில் முக்கியமான இடத்தை வகிக்கத்தானே வேணும்?


அகத்தியர் தான் ஏட்டில் எழதி வைத்துள்ளாரே இவ என்னத்துக்கு இதை திருப்பி சொல்கிறா என்று நினைக்க கூடாது, காரணம் புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் என் போன்ற தமிழர்களுக்கு இந்த ஆளி விதை என்ன என்றே தெரியாமல் இருக்கலாம், வெளி நாட்டில் வாழ்பவர்களுக்குத்தான் நோய்களும் அதிகம் எனவே நான் இதை வாசித்து அறிந்து, ஆராய்ந்து மீண்டும் என் கருத்தையும் சேர்த்து என் எழத்தில் எழுதுவதில் ஆர்வம் காட்டுவதில் தப்பு ஏதும் உண்டோ?

கவி மீனா -ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வயது காணும் புரட்சித்தலைவர் M.G.R



எம்.ஜி.ஆர் என்ற பெயரில் புகழ் பெற்ற, மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் (ஜனவரி 17, 1917 - டிசம்பர் 24, 1987), தமிழ்த் திரைப்பட நடிகராகவும் 1977முதல் இறக்கும் வரை தமிழ்நாட்டின் தொடர்ந்து மூன்று முறை முதலமைச்சராகவும் இருந்தவர்.

பிறப்பு:- 17.01.1917 - நாவலப்பிட்டி - இலங்கை

இறப்பு:- 24.12.1987 - (70 வயது) சென்னை - இந்தியா

மனைவிமார்:- (1)தங்கமணி (2) சதானந்தவரி (3)ஜானகி

பிள்ளைகள்:- இல்லை

தொடக்க காலத்தில் நாடகங்களில் நடித்தார்.அண்ணல் காந்தியடிகளின் கருத்துகளால் ஈர்க்கப்பெற்று தேசிய முற்போக்கு காங்கிரசில் இணைந்தார். சதிலீலாவதி என்ற திரைப்படம் மூலம் தமிழக திரைத்துறையில் அறிமுகமாகி, கதாநாயகனாக மாறிய பிறகு, அறிஞர் அண்ணாவின் அரசியல் கருத்துகளில் ஈர்க்கப்பெற்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். அண்ணாவின் மறைவுக்குப்பிறகு, கருணாநிதியால் திமுகவிலிருந்து நீக்கப்பட்டார்.

அதன் பின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியைத் தொடங்கி, தேர்தலில் நின்று தொடர்ந்து மூன்று முறை தமிழகத்தில் வெற்றிபெற்று முதலமைச்சரானார்.இவர் உயரிய விருதுகளில் ஒன்றான பாரத ரத்னா விருதினை பெற்றவர்.

## இளமைப்பருவம்

இராமச்சந்திரன் இலங்கையின் கண்டிக்கு அருகேயுள்ள நாவலப்பிட்டியில் மருதூர் கோபாலமேனனுக்கும் சத்தியபாமாவுக்கும் மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தை மருதூர் கோபாலமேனன் வக்கீலாகக் கேரளாவில் பணிபுரிந்தார். அவருடைய மறைவுக்குப் பின்னர் தமிழ்நாட்டின் கும்பகோணத்தில் எம்.ஜி.ஆர் குடியேறினார். குடும்ப சூழ்நிலைகளின் காரணமாகப் படிப்பைத்தொடர முடியாததால் இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்துறையில் நன்கு அனுபவமான நிலைமையில் திரைப்படத்துறைக்குச் சென்றார். திரைப்படத்துறையில் தனது அயரா உழைப்புக் காரணமாக முன்னேறி முதன்மை நடிகரானார். இவரது நடிப்பு பெரும் எண்ணிகையிலான மக்களைக் கவர்ந்தது. எம். ஜி.ஆர். திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளருமாவார். காந்திய கொள்கைகளால் உந்தப்பட்டு, இவர் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார்.

### முதல் திருமணம்

எம்.ஜி.ஆர் முதலில் தங்கமணியை மணந்தார். பிரசவத்திற்காகத் தாய் ஊருக்குச் சென்ற தங்கமணிக்கு குழந்தை இறந்தே பிறந்தது. அதன் பின் தங்கமணியும் உடல்நலக் குறைவினால் இறந்தார்.

### இரண்டாவது திருமணம்

அதன் பிறகு சதானந்தவதியை மணந்தார். இருவருக்கும் குழந்தைகள் இல்லை. பின்னர் சதானந்தவதி நோய் காரணமாக இறந்தார்

### மூன்றாவது திருமணம்

இரண்டாவது கதாநாயகனாகத் தியாகராஜ பாகவதர் தயாரித்த இராஜமுக்தி படத்தில் நடித்தார். அப்படத்தில் வி. என். ஜானகி கதாநாயகியாக நடித்தார். ஜானகியின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு மணம்முடித்தார்.

### வளர்ப்புகுழந்தைகள்

மூன்றுதிருமணங்கள்என்றாலும் எம். ஜி.ஆருக்கு குழந்தைகள் இல்லை. எனவே ஜானகி- கண்பதிபட் ஆகிய இருவருக்கும் பிறந்தஅப்பு என்ற சுரேந்திரனையும் ஜானகியின் தம்பியாகிய மணி என்னும் நாராயணன் குழந்தைகளாகியலதா (ராஜேந்திரன்), கீதா (மதுமோகன்), சுதா (கோபாலகிருஷ்ணன்). ஜானகி (சிவராமன்), தீபன் ஆகிய ஐவரையும் தன் வளர்ப்புப் பிள்ளைகளாகத் தத்தெடுத்துக் கொண்டார்.

### கல்வி உதவி

எம்.ஜி.ஆர் எத்தனையோ குழந்தைகளுக்குப் பாதுகாவலராக இருந்து படிக்கவைத்தார். அதில் முக்கியமான இரண்டு பேர், அரசியலைக் கலக்கிய துரைமுருகன். சினிமாவில் வலம் வந்த கோவை சரளா என்று எம். ஜி.ஆர் 25ல் ஆனந்த விகடன் இதழ் குறிப்பிட்டுள்ளது.

### செல்லப் பிராணிகள்

எம்.ஜி.ஆர்

ராஜா-ராணி என்ற பெயர்களுடைய இரண்டு சிங்கங்களை வளர்த்தார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமாவரம் தோட்டத்தில் ஆடு, மாடு, கோழி, நாயுடன் ஒரு கரடியும் வளர்த்தார். இவற்றைக் கவனிக்க தனி மருத்துவரைப் பணியமர்த்தியிருந்தார்.

## திரைப்பட வாழ்க்கை

1936ல் சதிலீலாவதி என்னும் திரைப்படத்தில் முதலில் நடித்திருந்தும், 1947 ல் அவர் நடித்த ராஜகுமாரி படம் வெளிவரும்வரை அதிகம் புகழ் கிடைக்கவில்லை. தொடர்ந்து வந்த அடுத்த 25 ஆண்டுகள், தமிழ் திரைப்பட உலகில் மிக முக்கியமானவர்களில் ஒருவராக விளங்கினர். இவருடைய சக நடிகர்களுள் ஒருவரான எம். ஆர். ராதாவினால் சுடப்பட்டுத் தெளிவாகப் பேசும் திறனை இழந்தபோதும் அவருடைய நட்சத்திர வலிமை குறையவேயில்லை. இச்சம்பவத்திற்குப் பின்னார் முதன் முதலாக வெளிவந்த திரைப்படம் காவல்காரன். இது மாபெரும் வெற்றிப் படமாகவும், திரையுலகில் அவரது ஆளுமையை மீண்டும் நிலை நிறுத்தும் நிகழ்வாகவும் அமைந்தது. 1971 ஆம் ஆண்டின் அகில இந்தியசிறந்த நடிகராக, எம்.ஜி. ஆரை மத்திய அரசு தேர்வு செய்து, "பாரத்" விருதை வழங்கியது. இது சத்யா மூவிஸ் தயாரிப்பான "ரிக்சாக்காரன்" படத்தில் நடித்ததற்காகக் கிடைத்தது. தமிழ்நாட்டில் மொத்தம் 12 தியேட்டர்களில் 100 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை ஓடி, வசூலைக் குவித்தது படம். அவர் நடித்துக் கடைசியாக வெளி வந்த திரைப்படம் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன். தனது திரைப்பட நிறுவனத்தின் கீழ் எம்.ஜி.ஆர். மூன்று படங்களைத் தயாரித்தார். இத் திரைப்படங்களை அவரே இயக்கினார் நாடோடி மன்னன், அடிமைப் பெண் மற்றும் உலகம் சுற்றும் வாலிபன்.

## அரசியல் வாழ்க்கை

இவர் ஒரு மலையாளியாக இருந்தும், ஒரு முன்னணித் தமிழ்த் தேசியவாதியாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய உறுப்பினராகவும் திகழ்ந்தார். அக்கட்சியின் பொருளாளராகவும் நீண்ட காலம் பணியாற்றினார். கருணாநிதியுடன் நட்பாக இருந்தார். சி. என். அண்ணாத்துரையின் மறைவுக்குப் பின், மு. கருணாநிதி முதலமைச்சரானதைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களால் ஏற்பட்ட முரண்பாடுகள் எம்.ஜி.ஆர் கட்சியை விட்டு வெளியேறினார். 1972-இல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் புதிய கட்சியொன்றை அவர் ஆரம்பித்தார். பின்பு அக்கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழமாக மாறியது. முதன் முதலாகப் போட்டியிட்ட திண்டுக்கல் பகுதியில் பெரும் வெற்றி பெற்றது. திரைப்படங்களின் மூலம் அவரடைந்த புகழும், அவருடைய வசீகரமான தோற்றமும், சமூகத் தொண்டனாகவும், ஏழைகள் தோழனாகவும், கொடையாளியாகவும், வீரனாகவும் நடித்ததன் மூலம் பெற்றுக் கொண்ட நற்பெயரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மிக விரைவில் மக்களாதரவைப் பெற உதவின. 1977ல் நடைபெற்ற தேர்தலில் பெரும் வெற்றி பெற்றுத் தமிழ் நாட்டின் முதலமைச்சரானார். 1984 ல் கடுமையாக நோய்வாய்ப்பட்டும், தமிழக அரசியல் வரலாற்றில் தேர்தல் பிரசாரத்திற்கே வராமல் முதலமைச்சர் ஆன ஒரே முதல்வரானார் எம்.ஜி.ஆர். 1987 வரை 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக முதலமைச்சர் பதவியை வகித்துப் பதவியிலிருக்கும் போதே காலமானார். மறைவிற்குப் பின் அவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இவரது கட்சி 1988-இல் பிரிந்து 1989-இல் இணைந்தது. 1991 முதல் 1996 வரையிலும், 2001 முதல் 2006 வரையிலும் 2011 முதல் 2016 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜெ. ஜெயலலிதா தலைமையில் ஆட்சி அமைத்திருக்கிறது. இவர் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் திராவிடக் கட்சியில் இருந்தபோதிலும் தமிழ் நாட்டில் பலர் இவரைக் கடவுள் போலவே போற்றினார்கள். இவர் இறந்து 30 ஆண்டுகளுக்கு இன்றும் இவருக்காகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வாக்களிப்பவர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர் இது அவருக்கு மக்கள் மத்தியிலிருந்த பெரும் செல்வாக்கைக் காட்டுகிறது.

### திட்டங்கள்

சத்துணவுத் திட்டம், விதவை ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண உதவி தாலிக்கு தங்கம் வழங்குதல், மகளிருக்கு சேவை நிலையங்கள், பணிபுரியும் பெண்களுக்குத் தங்கும் விடுதிகள், தாய் சேய் நல இல்லங்கள், இலவச சீருடை வழங்குதல் திட்டம், இலவச காலணி வழங்குதல் திட்டம், இலவச பற்பொடி வழங்குதல் திட்டம், இலவச பாடநூல் வழங்குதல் திட்டம், வறட்சிக் காலத்தில் லொறிகள் மூலம் குடிநீர் வழங்குகின்ற திட்டம் எனப்பல திட்டங்கள் அடங்கும்.

### தமிழ் பல்கலைக் கழகம் நிறுவுதல்

1921ம் ஆண்டு தமிழ் மொழிக்கு எனத் தனியே நிறுவினார். தமிழ்மொழி, தமிழர்களின் கலை, இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், மொழியியல், வரலாறு, புவியியல், மெய்யியல், கடலியல், சித்த மருத்துவம், கைவினைக் கலை, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழை மேம்படுத்த, தமிழர்களின் மரபுப் பெருமையைப் பரப்ப, 1981 இல் அன்று முதலமைச்சராகயிருந்த திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் முன் முயற்சியில் தமிழக அரசால் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது

### தமிழ் ஈழம் குறித்த நிலைப்பாடு

இலங்கையின் கண்டியில் பிறந்தமையால் தமிழ் ஈழம் குறித்தான ஆர்வமும், செயல்பாடுகளும் எம்.ஜி.ஆரிடம் அதிகம் காணப்பட்டன. ஈழத்திற்காக வெளிப்படையான ஆதரவினை எம்.ஜி.ஆர் தமிழக முதலமைச்சராக இருக்கும் போது தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களில் ஈழப்போராட்டம் தீவிரமடைந்த போது அதற்கு ஆதரவளித்தார் பிரபாகரனின் தலைமையிலான புலிகளின் போராட்டத்துக்குத் தேவையான ஆயுதங்கள் வாங்க ரூ.7 கோடி சொந்தப் பணத்தை தந்தார் என நெடுமாறன் கூறியுள்ளார்.'முன்னாள் தமிழக முதல்வர் அமரர். எம். ஜி.ஆர். போன்று ஈழத்தமிழர்களுக்கு உதவி செய்தவர்கள் யாருமில்லை. அவர் மட்டும் மேலும் 10 ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் ஈழத்தமிழர்களுக்குத் தனி நாடு கிடைத்திருக்கும். அது நடக்காததுதான் வரலாற்று துயரம்' என்று இயக்குனரும் நாம் தமிழர் கட்சி தலைவருமான சீமான் தெரிவித்தார்.

## எழுத்துகள்

நாடோடி மன்னன் புத்தகம்
எம்.ஜி.ஆர் தானே தயாரித்த நாடோடி மன்னன் திரைப்படத்தினைப் பற்றிப் புத்தகம் எழுதியுள்ளார். இந்தப் புத்தகத்தில் படத்தில் பணியாற்றிய ஒவ்வொருவரைப் பற்றியும் எழுதியுள்ள எம்.ஜி.ஆர், படத்தின் கதை, அதை தானே தயாரிக்கவேண்டிய நிலை என பல விஷயங்களை எழுதியுள்ளார். இந்தப்படம் வெளிவந்தபின் வெற்றி அடைந்தால் தாம் ஒரு மன்னன் என்றும், தோல்வியுற்றால் தாம் ஒரு நாடோடி என்றும் எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருந்தார்

சுயசரிதைத் தொடர்
"நான் ஏன் பிறந்தேன்?" - ஆனந்த விகடனில் எம்.ஜி.ஆர் எழுதிய சுயசரிதைத் தொடர். அதை அவர் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. அடுத்ததாகத் தொடங்கிய "எனது வாழ்க்கை பாதையிலே" தொடரும் முற்றுப் பெறவில்லை சிறப்பு விருதுகளும் பட்டங்களும் எம். ஜி.ஆர் என்கிற எம்.ஜி.ராமச்சந்திரன் தனது திரைச்சேவைக்காகவும், பொதுச்சேவைக்காகவும் பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். அவைகளில் குறிப்பிடத்தக்க சில மட்டும்.

விருதுகள்

1. பாரத் விருது - இந்திய அரசு
2. அண்ணா விருது - தமிழ்நாடு அரசு
3. பாரத ரத்னா விருது - இந்திய அரசு
4. பத்மசிறீ விருது - இந்திய அரசு (ஏற்க மறுப்பு)
5. சிறப்பு முனைவர் பட்டம் - அமெரிக்கா அரிசோனா பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (ஏற்க மறுப்பு), சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (ஏற்க மறுப்பு)
6. வெள்ளியானை விருது - இந்திய சாரணர் இயக்கம்.

திரைச்சேவைக்கான பட்டங்களும் வழங்கியவர்களும்

1.இதயக்கனி - அறிஞர் அண்ணா
2.புரட்சிநடிகர் - கலைஞர் மு.கருணாநிதி
3. நடிக மன்னன் - சென்னை ரசிகர்கள் (சி.சுப்பிரமணியம் அவர்களால் வழங்கப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.மக்கள் நடிகர் - நாகர்கோவில் ரசிகர்கள்
5.பல்கலை வேந்தர் - சிங்கப்பூர் ரசிகர்கள்
6.மக்கள் கலைஞர் - காரைக்குடி ரசிகர்கள்
7.கலை அரசர் - விழுப்புரம் முத்தமிழ்க் கலை மன்றம்
8.கலைச்சுடர் - மதுரை தேகப்பயிற்சிக் கலை மன்றம்
9.கலை மன்னர் - நீதிபதி ராஜமன்னார்
10.கலை மன்னன் - சென்னை ரசிகர்கள்
11.கலை வேந்தர் - மலேசிய ரசிகர்கள்
12.திரை நாயகன் - சேலம் ரசிகர்கள்

## பொதுச்சேவைக்கான பட்டங்களும் வழங்கியவர்களும்

1.கொடுத்துச் சிவந்த கரம் - குடந்தை ரசிகர்கள்
2.கலியுகக் கடவுள் - பெங்களூர் விழா
3.நிருத்திய சக்கரவர்த்தி - இலங்கை ரசிகர்கள்
4.பொன்மனச் செம்மல் - கிருபானந்த வாரியார்
5.மக்கள் திலகம் - தமிழ்வாணன்
6.வாத்தியார் - திருநெல்வேலி ரசிகர்கள்
7.புரட்சித்தலைவர் - கே. ஏ. கிருஷ்ணசாமி
8.இதய தெய்வம் - தமிழ்நாடு பொதுமக்கள்
9.மக்கள் மதிவாணர் - இரா. நெடுஞ்செழியன்
10.ஆளவந்தார் - ம. பொ. சிவஞானம்

## செயல்பாடுகள்

1. ஜனவரி 1986 அன்று அண்ணாவின் பவள விழாவின் நினைவாக அமைக்கப்பட்ட அண்ணா வளைவினை திறந்துவைத்தார் எம். ஜி.ஆர். 7.47 லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட இது, எம்.ஜி.ஆரின் ஆலோசனையால் 54 அடி உயரத்தில் அமைக்கப்பட்டது. இந்த வளைவை ஸ்தபதி கணபதி 105 நாட்களில் கட்டி முடித்தார்.

## எம்.ஜி.ஆர் நினைவிடங்கள்

எம்.ஜி.ஆர் சமாதி
எம்.ஜி.ஆர் நினைவிடம்

தமிழ்நாடு அரசு எம். ஜி. ஆர் நினைவாகச் சென்னையில் மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடத்துக்கு அருகில் அவரது உடல் புதைக்கப்பட்டது. அந்த இடத்தில் எம்.ஜி.ஆர். நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எம். ஜி.ஆரின். மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆரின் அரிய புகைப்படங்களும், அவருடைய சில பொருட்களும் மக்களின் பார்வைக்கு தனி கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தாமரை மலர் விரிந்த நிலையில் இருப்பது போன்ற அமைப்பின் நடுவே அவர் உடல் வைக்கப்பட்டுள்ள சமாதி உள்ளது. சமாதியின் அருகே நினைவுத்தாண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் தொண்டர்களும் வந்து அஞ்சலி செலுத்துகின்றனர். தினமும் ஆயிரக்கணக்கானோர் இந்த நினைவிடத்திற்கு வருகை தந்து தங்களின் அன்பு தலைவருக்கு மரியாதை செலுத்துகின்றனர்.

சென்னை கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் தினமும் அன்னதானம் வழங்க வேண்டும் என்று அதிமுக உறுப்பினர் சி. கிருஷ்ணன் (ஓமலூ ர்) மார்ச் 2012 பட்ஜெட் மீதான விவாதத்தின் போது கோரிக்கை விடுத்தார். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஏழைகளுக்காகப் பாடுபட்டவர். சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடம் ஏழைகளுக்குக் கோவில் போன்றது. அதனால் கோவில்களில் வழங்கப்படுவதைப் போல அன்னதானம் எம்.ஜி.ஆர் நினைவிடத்திலும் வழங்க வேண்டும் என்று கூறினார்.

## டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவு இல்லம்

டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவு இல்லம் சென்னை தியாகராய நகரில் உள்ள ஆற்காடு முதலித் தெருவில் அமைந்துள்ளது எம். ஜி.ஆர் நினைவு இல்லம். எம். ஜி.ஆர் இந்த இல்லத்தினை தனது அலுவலகமாகப் பயன்படுத்தி வந்தார். இல்லத்தின் முன்புறம் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவு இல்லம் எனும் அரைவட்ட வடிவிலான பெயர்ப் பலகை அமைக்கப்பட்டுள்ளது. எம். ஜி.ஆரின் மார்பளவு சிலையொன்று அழகிய சிறு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எம். ஜி.ஆர் பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்திய TMX 4777 எண்ணுள்ள அம்பாசிடர் கார் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் எம்.ஜி.ஆருக்கு வழங்கப்பட்ட பரிசு பொருள்களும், அவர் பயன்படுத்திய பொருள்களும் இந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அருள்மிகு எம்.ஜி.ஆர். ஆலயம் திருநின்றவூர் நத்தம் மேடு கிராமத்தில் உள்ள செல்லியம்மன் சாலையில் 1800 சதுர அடி மனையில் எம்.ஜி.ஆருக்கான ஆலையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை, புதுப்பேட்டையை சேர்ந்தவர் கலைவாணன் மற்றும் சாந்தி தம்பதியினர் இந்தக் கோவிலை அமைத்துப் பாதுகாவலர்களாக உள்ளார்கள். 15.08.11 அன்று எம்.ஜி.ஆர் கோவிலுக்குக் கும்பாபிசேகமும், உற்சவர் சிலைக்குப் பக்தர்கள் 108 குடங்களில் பால் அபிசேகமும் நடந்தது மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சரும் புகழ்பெற்ற நடிகருமான எம்.ஜி.ஆருக்கு தமிழகம் முழவதிலும் பல ஊர்களில் கோயில்கள் உள்ளன என்று 30, மே 2011ல் வெளிவந்த நக்கீரன் இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம் அமரர் எம் ஜி .ஆர் என்னும் பொம்மனச் செல்வர், ஏழைகளின் தோழன், புரட்சித்தலைவர் இறந்தாலும் இறவாழ்புகழ்பெற்ற பெரும் தலைவர். தமிழர் நெஞ்சங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports – Top Ten (உதைபந்தாட்டம்)

ஜேர்மனியில் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர்களாகத் தெரிவு செய்யப்படவர்கள் விபரம்..

| ஆண்டு | பெயர் | விளையாடிய கழகத்தின் பெயர் |
|---|---|---|
| 2016 - | Jerome Boateng | -FC Bayern Munchen |
| 2015 - | Kevin De Bruyne | -V&L Wolfsburg |
| 2014 - | Manuel Neuer | -FC Bayern Munchen |
| 2013- | Bastian Schweinsreiger | -FC Bayern Munchen |
| 2012- | Marco Reus | -FC Monchengladbach |
| 2011- | Manuel Neuer | -FC Schalke 04 |
| 2010- | Arjen Robben | -FC Bayern Munchen |
| 2009- | Grafite | -V&L Wolfsburg |
| 2008- | Franck Ribery | -FC Bayern Munchen |
| 2007- | Mario Gomez | -V&B Stuttgart |

ஐரோப்பிய உதைபந்தாட்ட வீரர்களின் பட்டியல்

ஆண்டு, வீரரின் பெயர், வீரரின் சொந்தநாடு, விளையாடிய கழகம் போன்ற விபரங்களைக் காணலாம்...

| | | | |
|---|---|---|---|
| 2007 | Kaká | Brasilien | AC Mailand |
| 2008 | Cristiano Ronaldo | Portugal | Manchester United |
| 2009 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2010 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2011 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2012 | Andres Iniesta | Spanien | FC Barcelona |
| 2013 | Franck Ribéry | Frankreich | FC Bayern München |
| 2014 | Cristiano Ronaldo | Portugal | Real Madrid |
| 2015 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2016 | Cristiano Ronald | Portugal | Real Madrid |

உலக உதைபந்தாட்ட வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட வீரர்களின் பெயர்களும் அவர்களின் நாடுகளின் பெயர்கள் மற்றும் அவர்கள் விளையாடிய கழகங்களின் பெயர்களும்

| | | | |
|---|---|---|---|
| 2007 | Kaká | Brasilien | AC Mailand |
| 2008 | Cristiano Ronaldo | Portugal | Manchester United |
| 2009 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2010 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2011 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2012 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2013 | Cristiano Ronaldo | Portugal | Real Madrid |
| 2014 | Cristiano Ronaldo | Portugal | Real Madrid |
| 2015 | Lionel Messi | Argentinien | FC Barcelona |
| 2016 | Cristiano Ronaldo | Portugal | Real Madrid |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் அதிகூடிய தடவைகள் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரராக ஆர்ஜன்தீனாவைச் சேர்ந்த லியோனல் மெஸி 5 தடவைகள் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும் ஏனையவர்கள் எத்தனை தடவைகள் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்கள் எந்த நாட்டவர் என்ற விபரத்தையும் இங்கே காணலாம்

| | | | |
|---|---|---|---|
| Lionel Messi | 5x | தடவைகள் | - ஆர்ஜன்தீனா |
| Cristiano Ronaldo | 4x | | - போத்துக்கல் |
| Ronaldo | 3x | | - பிறேசில் |
| Zinédine Zidane | 3x | | - பிரான்ஸ் |
| Marco van Basten | 2x | | - நெதர்லாந்து |
| Ruud Gullit | 2x | | - நெதர்லாந்து |
| Lothar Matthäus | 2x | | - ஜேர்மனி |
| Michel Platini | 2x | | - பிரான்ஸ் |
| Ronaldinho | 2x | | - பிறேசில் |
| Luis Figo | 1x | | - போத்துக்கல் |
| Kaká | 1x | | - பிறேசில் |
| Diego Maradona | 1x | | - ஆஜர்ன்தீனா |

**சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர்கள்.....**

உலக ஒலிம்பிக் சம்மேளனத்தின் (I O C) (International Olympic Commity) தலைவர்களாக இருந்தவர்கள்...

| ஆண்டு | பெயர் | நாட்டவர் |
|---|---|---|
| 1894-1896 - | Demetrius Bikilas | - கிறீஸ்லாந்து |
| 1896-1925 - | Pierre de Coubertia | - பிரான்ஸ் |
| 1925-1942 - | Henri de Baillet Latour | - பெல்ஜியம் |
| 1942-1952 - | Sigfrid Edstrom | - சுவீடன் |
| 1952-1972 - | Avery Brundage | - அமெரிக்கா |
| 1972-1980 - | Michael Killanin | - அயர்லாந்து |
| 1980-2001 - | Juan Antonio Samaranch | - ஸ்பெயின் |
| 2001-2013 - | Jacques Rogge | - பெல்ஜியம் |
| 2013-தொடக்கம்- | Thomas Bach | - ஜேர்மனி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத்திமிங்கலம்...

உயிரினங்களில் மிகப்பெரிதானது திமிங்கிலம் எனக்கருதப்படுகின்றது. இந்த திமிங்கில வகையில் வெள்ளைத்திமிங்கிலமும் ஒன்றாகும். கடலிலே ஆதிக்கம் செலுத்தும் இது பாரிய கப்பல்களையும் துவம்சம் செய்யக்கூடியதாகும். எப்படியிருப்பினும் மனிதனின் பிடியின் கீழ்தான். மனிதன் இவற்றை வேட்டையாடி வருகிறான். இதனால் கோடிக்கணக்கான பணத்தையும் சம்பாதிக்கிறான். இந்த திமிங்கிலம் பெரிய கடற்பரப்புகளில்தான் வாழுமாம். வெள்ளைத்திமிங்கில வகைகள் அமெரிக்கா, மெக்ஸிக்கோ, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, யப்பான், தென்னாபிரிக்கா கடற் பிராந்தியங்களில்தான் அதிகமாக வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த உயிரினத்தை வேட்டையாடுவது தடைசெய்யப்பட்டிருப்பதாக உலக சுற்றுச்சூழல் அமைப்பு கடுமையான சட்டநடவடிக்கைகளைக் கடைப்பிடித்தாலும் யப்பான் போன்ற நாடுகளில் வேட்டைக்காரர்கள் இலகுவாக வேட்டையாடி உணவுப்பசியைத் தீர்த்துக் கொள்வதுடன் பல வேட்டைக்காரர்கள் பெரும் பணத்தையும் சம்பாதித்துக் கொள்கிறார்களாம். இது பற்றிய சிறிய குறிப்பை இங்கே காணலாம்.

-மணிக்கு 60 - 80 கிலோமீட்டர் செல்லக்கூடிய உயிரினமாகும்.
-இந்த உயிரினத்தின் இதயம் இதன் அடிப்பாகத்தில்தான் உள்ளது. இங்கிருந்துதான் உடலின் எல்லாப்பாகங்களுக்கும் இரத்தம் செல்கிறது.
-இதற்குச் சுமார் 300 பற்கள் உண்டு. ஒவ்வொன்றின் நீளமும் 7.5 சென்றிமீட்டர்வரை இருக்கும்.
-இதன் பற்கள் மனித பற்களைவிட சுமார் 22 மடங்கு வலிமைகொண்டது.
-நிறை 3-5 தொன்னுக்குக் குறையாமலும் இருக்குமாம். யானைகளைவிடக் கூடுதலான நிறையிலும் சில காணப்படும்.
-நீளம் 7 மீட்டர் வரை நீண்டிருக்கும்.
-டொல்பின், பெரியமீன்கள், கடற்சிங்கம், கடல்நாய் போன்ற பெரிய உயிரினங்களை வேட்டையாடித் தனது பசியைத் தீர்த்துக் கொள்ளுமாம்.
-இந்த உயிரினத்தைப் பல நாடுகளில் உணவுக்கும் பயன்படுத்துகிறார்கள்.
-இதன் தோலில் இருந்து அதிவிலை உயர்ந்த பல பொருட்கள் தயாரிக்கப் படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் சில பொருட்களின் விலையைப் பார்த்தால் யானையைப்போல் இருந்தாலும் இறந்தாலும் பொன்தான். அந்த அளவிற்கு விலைமதிப்புள்ளவையே. சிலபொருட்களின் விலைகளையும் இங்கே காணலாம்...

-இதன் தோலிலிருந்து தயாரிக்கப்படும் கைப்பையின்விலை 11.000 - 12.000Euro
-இதன் தோலிலிருந்து தயாரிக்கப்படும் கழுத்துத்துண்டு 120 - 150 Euro
-இதன் தோலிலிருந்து தயாரிக்கப்படும் யக்கட் (மேலங்கி) 1300 - 1500 Euro



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகவலம்.....

**உயரமானவர்கள்...**

உலகிலேயே உயரமானவர்கள் யார்? டச்சு நாட்டு ஆண்களும், லாத்வியா நாட்டு பெண்களும் தான் உலகிலேயே உயரமானவர்கள் என்று புதிய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. அதே சமயம், குவாட்டமாலா நாட்டு பெண்களும், கிழக்கு தைமோர் நாட்டு ஆண்களும் தான் உலகிலேயே குள்ளமானவர்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. மனிதர்களின் உயரங்களில், மரபியல் தாக்கங்களால் சில மாற்றங்கள் ஏற்படலாம் எனினும் நல்ல சத்தூட்டம், சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றது என லண்டன் இம்பிரியல் கல்லூரியின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**சீனாவின் முன்னேற்றம்...**

இது கருத்துச் சுதந்திர மறுப்பா? சீனாவில் ஏறத்தாழ 3,300 வரையிலான தொலைக்காட்சி நிலையங்கள் இயங்குகின்றன. அதேவேளையில் 2,000 வரையிலான செய்திப் பத்திரிகைகளும், 10,000 வரையிலான சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. சீனாவில் கருத்துச் சுதந்திரம் இல்லை எனக் கூப்பாடு போடும் மேற்கத்தைய நாடுகளில் இவ்வளவு தொகை தொலைக்காட்சி நிலையங்களும், வெளியீடுகளும் வெளிவருகின்றன. எண்ணும் எழத்துடன் கணினியும் உலகில் வர்த்தகரீதியில் அதிவேகமான கணனிகளை உருவாக்குவதில் சீனா முன்னணியில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. கணனி உருவாக்கத்தில் நாடுகளின் தர வரிசை வருமாறு:
சீனா - 167 வகைகள் அமெரிக்கா - 165 வகைகள் யப்பான் - 29 வகைகள்
பிரான்ஸ் -18 வகைகள் பிரித்தானியா - 12 வகைகள் இந்தியா - 09 வகைகள்

**இந்த ஆண்டு கடலில் மூழ்கிப் பலியான அகதிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?**

2016ம் ஆண்டில் உலகம் முழவதும் சுமார் 7,189 அகதிகள் உயிரிழந்துள்ளதாக அகதிகள் தொடர்பான சர்வதேச நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.கடந்த 2 ஆண்டுகளில் மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து சுமார் 1.5 மில்லியன் அகதிகள் ஐரோப்பாவில் தஞ்மடைந்துள்ளனர். இதில் இந்த ஆண்டு மத்திய தரைக்கடல் பகுதியில் 7,189 பேர் கடலில் மூழ்கி இறந்துள்ளனர் அல்லது காணாமல் போய் உள்ளனர். நாளொன்றுக்கு சராசரியாக 20 பேர் என்ற கணக்கில் இந்த உயிரிழப்பு நிகழ்ந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உயிழப்பானது மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த 2015ம் ஆண்டில் மத்திய தரைக்கடல் பகுதியில் 3,771 அகதிகள் உயிரிழந்ததாக இந்த நிறுவனம் தகவல் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் தடுப்புக் காவலில் 600 பேர் மரணம்!

இந்தியாவில், கடந்த 2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரை, பொலிஸ் தடுப்புக்காவலில் 600 பேர் உயிரிழந்திருப்பதாக அமெரிக்காவை மையமாகக் கொண்ட மனித உரிமை அமைப்பான மனித உரிமை கண்காணிப்பகம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஜெயலலிதாவின் மரணச் செய்தியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 597 ஆக அதிகரிப்பு

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா காலமான செய்தியை கேள்வியுற்ற அதிர்ச்சியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 597 ஆக அதிகரித்துள்ளதாக அ.தி.மு.க தெரிவித்துள்ளது.

## புலம்பெயர்ந்தோர் பட்டியலில் இந்த நாடு தான் முதலிடமாம்!

தங்கள் சொந்த நாட்டிலிருந்து பல்வேறு விடயங்களுக்காக வேறு நாட்டிற்கு புலம்பெயர்தோர் பட்டியலில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. அமெரிக்கா நாட்டின் பிரபல ஆய்வு நிறுவனமான பேவ் வெளியிட்டுள்ள அறிக்கையில், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு விடயங்களுக்காக தங்கள் சொந்த நாட்டிலிருந்து வெவ்வேறு நாட்டிற்கு 1.56 கோடி இந்தியர்கள் புலம்பெயர்ந்துள்ளனர். இதில் அதிகபட்ச இந்தியர்கள் ஐக்கிய அரசு எமிரேட்சில் வசிப்பதாகவும், பலர் வெளிநாட்டு குடியுரிமை பெற்றுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த புலம்பெயர்ப்பு பட்டியலில் இரண்டாவது இடத்தில் 1.23 கோடி எண்ணிக்கையுடன் மெக்சிகோ உள்ளது. ரஷ்யா 1.06 கோடியுடன், மூன்றாவது இடத்திலும், 95 லட்சம் பேருடன் சீனா நான்காவது இடத்திலும், 72 லட்சம் பேருடன் வங்கதேசம் ஐந்தாவது இடத்திலும் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் 12 பேர் மீது லொறி ஏற்றி கொன்றது நாங்கள் தான்! அதிர்ச்சியளித்த ஐ.எஸ் இயக்கம்

ஜேர்மனியின் பெர்லின் நகரில் உள்ள கிறிஸ்துமஸ் சந்தைக்குள் வாகனத்தை மக்கள் மீது ஏற்றி கொலை செய்த சம்பவத்துக்கு ஐ.எஸ் பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. 19.12.2016 அன்று ஜேர்மனி நாட்டின் பெர்லின் நகரில் உள்ள கிறிஸ்துமஸ் சந்தையில் அதிவேகமாக வந்த டிரக் லொறி ஒன்று மக்கள் கூட்டத்தில் புகுந்தது. இந்த விபத்தில் உடல் நசுங்கி 12 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குண்டு மனிதன்!...

மலேசியாவின் சிபு பகுதியைச் சேர்ந்த சியா ஜி ஹெர்ங்கின் உடல் பருமனை கண்டு பலர் திகைத்து போய் உள்ளனர். குறித்த நபர் கடந்த 10 ஆண்டு காலமாக ஒவ்வொரு நாளும் 10.5 கிலோ (30 பவுல்ஸ்) நாடுல்ஸை சாப்பிட்ட பிறகு 12 க்கும் மேற்பட்ட மில்க்ஷேக்ஸ் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவற்றை சாப்பிட்டு வந்துள்ளார். இதன் காரணமாக மாரடைப்பு ஏற்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு தொடர்பினை மேற்கொண்டு உள்ளார். இதன்போது அங்கு வந்த மீட்பு குழவினர் 250kg உடல் பருமன் கொண்ட இவரினை கண்டு திகைத்து போய் உள்ளனர். இது தொடர்பாக மீட்பு மற்றும் தீயணைப்புத் துறைகள் உதவிப்பணியாளர் கருத்து தெரிவித்துள்ளார்.எங்களுக்கு அவசர அழைப்பு ஒன்று வந்தது. அழைப்பு வந்து ஒரு மணி நேரத்தில் ஹெர்ங் வசிக்கும் இடத்திற்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.மேலும், நாங்கள், 30 நிமிட போராட்டத்திற்கு பின்னர் இவரை அந்த அறையினுள் இருந்து வெளியில் கொண்டு வந்தோம்.

எனினும் இவருடைய நிலையில் ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றமுடியவில்லை, இதற்காக பாரம் தூக்கும் லொறி ஒன்றை பயன்படுத்தி மருத்துவமனைக்கு அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துடன் மருத்துவனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என கூறியுள்ளார். இது தொடர்பாக சியாவின் தாய் கூறுகையில், அதிகமாக சாப்பிடுவதால் இது போன்ற பிரச்சினை வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதற்கு முன்பாக ஸ்டிக் உதவியுடன் மெல்ல மெல்ல நடப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், சியா ஜி ஹெர்ங்கின் உடல் நிலை கடந்த மூன்று நான்கு வருடங்களாக மோசமடைந்து வந்துள்ளதால்அதிக நேரம் படுக்கையில் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். இதேவேளை, சியா ஜி ஹெர்ங்கின் நண்பர் ஒருவர் அவருக்கு படங்கள் பார்ப்பது, விளையாட்டு நிகழ்வுகள் பார்ப்பது தான் அதிகம் பிடிக்கும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## ஒரு வருடத்தின் இறப்பு.......

மிருகங்கள், ஊர்வன, மற்றும் பூச்சி இனங்களால் உலகில் ஆண்டுதோறும் பல்லாயிரம் பேர் இறந்துவிடுகிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சுகாதார நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இறப்புக்களை உற்று நோக்கினால்...

| | | |
|---|---|---|
| -நுளம்புகளால் ஏற்படும் மலேரியா டெங்கு காய்ச்சல் | - | 27 லட்சம்பேர் |
| -பாம்புக்கடியனால் | - | 1 ” |
| -தேள் மற்றும் விஷ ஜந்துக்கள் | - | 5.000” |
| -முதலை | - | 1.000 ” |
| -யானை | - | 500 ” |
| -காண்டாமிருகம் | - | 100 ” |
| -புலி | - | 50 ” |
| -திமிங்கிலம் மற்றும் மீன் இனம் | - | 15 ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதைசெய்யுங்க! வாழ்க்கை சொர்க்கம் தான்!...

ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலம் வரை ஆரோக்கியமாக இருக்கவே விரும்புவான். மனிதனின் ஆரோக்கியம் என்பது உடல் மற்றும் மனம் சம்மந்தப்பட்டதாகும். சில விடயங்களை பின்பற்றுவதன் மூலம் நம் ஆரோக்கியத்தை பேணி காக்க முடியும்.

### அளவாக காப்பி அருந்துதல்

காப்பியை குறைந்த அளவு குடித்தால் உடலுக்கு தீங்கு விளைவிக்காது. இதில் பல கெமிக்கல்கள் இருந்தாலும், இதில் உள்ள சில கெமிக்கல்கள் உடலுக்கு புத்துணர்ச்சியை தருகிறது. அதிக அளவில் இதை பருகினால் தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்.

### உருளைகிழங்கு

உருளைகிழங்கில் உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டசத்துக்களும் உள்ளது. இதில் அடங்கியிருக்கும் கலோரிகள் உடலுக்கு ஆரோக்கியத்தை அதிகளவில் தருகின்றது.

### தூக்கம்

சரியான அளவு மனிதர்கள் தூங்கினாலே, பல நோய்கள் வருவதை தடுக்கலாம் என மருத்துவர்கள் கூறுகிறார்கள். குழந்தைகள் 10லிருந்து 11 மணி நேரமும், பெரியவர்கள் 9 மணி நேரமும் தூங்குதல் நலம். தூக்கமின்மையால் மன அழுத்தம், டயபிடீஸ் போன்ற பிரச்சனைகள் ஏற்படக்கூடும்.

### ஆப்பிள் சாப்பிடுவது

An apple a day keeps doctors away! இது புகழ் பெற்ற வாக்கியம் ஆகும். ஆப்பிளை தினமும் சிறிய அளவில் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு தேவையான வைட்டமின்கள் கிடைப்பதுடன், வயிற்று சம்மந்தான நோய்கள் எதுவும் வராது.

### தண்ணீர் குடிப்பது

தினமும் 2 லிட்டர் தண்ணீர் அருந்துதல் உடல் ஆரோக்கியத்தையும், தோல் சம்மந்தமான நோய்கள் ஏதும் வராமலும் பாதுகாக்குமாம்!. குழாய்லிருந்து வரும் தண்ணீர்ப் போத்தலில் அடைத்து விற்கப்படும் தண்ணீரை விட ஆரோகியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழைப்பழம்**

தினமும் இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்டால், இதயம் துடிப்பு சீராக இருப்பதுடன், கண்பார்வையும் பிரகாசமாக இருக்கும். மேலும் உடல் எடையை குறைக்கும் தன்மையும் வாழைப்பழத்தில் உள்ளது.

**நடைப்பயிற்சி**

தினமும் ஒரு அரை மணி நேரமாவது நடைபயிற்சி செய்வது அவசியமாகும். இது உடலில் உள்ள நரம்புகளை சுறுசுறுப்பாக இருக்க வைக்கிறது . மேலும் சர்க்கரை வியாதி போன்ற நோய்கள் வராமல் தடுக்கிறது.

---

# இனிமையான வாழ்வுதரும் இஞ்சி...

இஞ்சி சமையலுக்கு மட்டுமல்லாமல் வியாதிகளை குணப்படுத்தவும் பயன்படுகிறது.
ஆனால் நகரத்தில் வாழும்மக்கள் இதன் அருமை புரியாமல் கண்ட சிகிச்சையை எடுத்துக்கொண்டு உடலைக் கெடுத்துக் கொள்கின்றனர்.
எனவே இஞ்சியின் பயன்களைப புரிந்துக்கொண்டு ஒருசில நோய்களுக்குப் பயன்படுத்துவதன்மூலம் அவற்றை குணப்படுத்தலாம்.

பிரசவத்தின்போது உண்டாகும் பொதுவான பிரச்சனைகளான குமட்டல், வாந்தி போன்றவைகளுக்கு இஞ்சிச் சாறினை குடித்து வந்தால், அவைஎளிதில்குணமாகும்.

கர்ப்பக்காலத்தில் பெண்களுக்கு உணவு என்பது மருந்தாகத் தோன்றும். இதுபோன்ற நேரங்களில் இஞ்சியால் தயாரிக்கப்பட்ட ஊறுகாய், துவையல் போன்ற பொருட்கள் பசியினைதூண்டி, பசியின்மையைப்போக்குகிறது.

கீமோதெரபி போன்ற சர்ஜரியின்போது உண்டாகும் குமட்டலைச் சரிசெய்கிறது. மூட்டுவலி, சதைப்பிடிப்புப் போன்ற வலிகளைக் குறைக்கும் மருந்தாகவும் இதுபயன்படுகிறது.
கடுமையான போதையையும் முறிக்கும் சக்தி இஞ்சிக்கு இருப்பதாக அறிஞர்கள் பலரும் கண்டறிந்துள்ளனர்.
எனவே, இஞ்சியை நாம் அன்றாட உணவில் எடுத்துக்கொள்வதன்மூலம் பலநோய்களை நாம் எதிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக் ஒபாமா...



பராக் உசேன் ஒபாமா (Barack Hussein Obama) பிறப்பு: ஆகஸ்ட் 4, 1961), ஐக்கிய அமெரிக்காவின் 2008 குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார், நவம்பர் 6, 2012 அன்று நடந்த அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி சார்பாக நின்று மீண்டும் அதிபர் ஆனார். அமெரிக்க வரலாற்றில் ஆபிரிக்க அமெரிக்க இனத்தை சேர்ந்த முதலாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையும், மற்றும் செனட் அவையின் உறுப்பினரான ஐந்தாவது ஆப்பிரிக்க-அமெரிக்க இனத்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

கொலம்பியா பல்கலைக்கழகத்திலிருந்தும் ஹார்வர்ட் சட்டக் கல்லூரியிலிருந்தும் பட்டங்களை பெற்ற ஒபாமா சிக்காகோவில் சமுதாய ஒருங்கிணைப்பாளராகவும் (community organizer) பொதுச் சட்ட வழக்கறிஞராகவும் பணியாற்றினார். 1997இல் இலினொய் மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 2004 வரை பதவியில் இருந்தார். 1992 முதல் 2004 வரை சிக்காகோ பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

.

## வாழ்க்கை வரலாறும் தொழிலும்

உயர்பள்ளியில் பட்டம் பெற்று லாஸ் ஏஞ்சலஸ் நகருக்கு நகர்ந்து ஆக்சிடென்டல் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளாக ஒபாமா படித்தார். பின்னர் கொலம்பியா பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றி 1983இல் அரசியல் அறிவியலில் பட்டம் பெற்றார். நியூயார்க் நகரிலேயே இன்னும் இரண்டு ஆண்டுகளாக வசித்து வணிக பன்னாட்டு நிறுவனம், நியூயார்க் பொது ஆராய்ச்சி குழுமம் ஆகிய அமைப்புகளில் வேலை செய்தார்.

1988இல் ஹார்வர்ட் சட்டக் கல்லூரியை சேர்ந்த ஒபாமா ஒரு ஆண்டுக்கு பிறகு ஹார்வர்ட் சட்ட விமர்சனம் (Harvard Law Review) என்ற புகழ்பெற்ற சட்ட தொடர்பான இதழின் பதிப்பாசிரியராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு ஆண்டு பின்பு இவ்விதழின் முதல் கருப்பின தலைவராக உறுதி செய்யப்பட்டார் 1992இல் சிக்காகோ சட்டக் கல்லூரியில் பணியாற்ற ஆரம்பித்தார். 1993இல் ஒரு சட்ட நிறுவனத்தையும் சேர்ந்து 1996 வரை மனித உரிமை தொடர்பான வழக்குகளில் வழக்கறிஞராக பணி புரிந்தார் இந்த சட்ட நிறுவனத்தில் இருக்கும் பொழுது மிசெல் ஒபாமாவை முதலாக சந்தித்தார் மிசெல்லை 1992இல் திருமணம் செய்தார். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள், மலியா (பி. 1998) மற்றும் சாஷா (பி. 2001) பிறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனால்ட் டிரம்ப்....



டோனால்ட் ஜான் டிரம்ப் (Donald John Trump) பிறப்பு: யூன் 14, 1946) அமெரிக்கத் தொழிலதிபரும், ஐக்கிய அமெரிக்காவின் அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவார். இவர் 45வது அரசுத்தலைவராக 2017 சனவரி 20 இல் பதவியேற்றார் குடியரசுக் கட்சி வேட்பாளராக 2016 தேர்தலில் போட்டியிட்டு, மக்களாட்சிக் கட்சி வேட்பாளர் கிலரி கிளின்டனை 2016 நவம்பர் 9 இல் வென்றார். அமெரிக்க வரலாற்றில் அதிக வயதில் (70) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது அரசுத் தலைவர் இவராவார்.

**பிறப்பும் இளமைக் காலமும்**

இவர் நியூயார்க் நகரத்தில் உள்ள குயின்சு புறநகர் பகுதியில் பிரட் திரம்புக்கும் மேரி திரம்புக்கும் 1946 ஆம் ஆண்டு பிறந்தது நியூயார்க் நகர பகுதியிலேயே. நான்காவது குழந்தையாகப் பிறந்தார்.

டிரம்ப் நியூயார்க் நகரின் போர்தம் பல்கலைக்கழகத்தில் ஆகத்து 1964 முதல் இரண்டு ஆண்டுகள் படித்து விட்டு பின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் வார்ட்டன் பள்ளியில் சேர்ந்து 1968இல் பொருளாதாரத்தில் இளங்கலை பட்டம் பெற்றார் அங்கு படித்த போது குடும்ப நிறுவனமான எலிசபெத் திரம்பு ஞ சன் (தந்தை வழி பாட்டி பெயரில் இருந்ந நிறுவனம்) என்பதில் பணி புரிந்தார். 1971ல் அதன் தலைவரானார்

இவர் திரைப்படங்களிலும் தொலைக்காட்சி தொடர்களிலும் சிறு வேடத்தில் நடித்துள்ளார். 2004 இலிருந்து 2015 வரை என்பிசி தொலைக்காட்சியில் நடித்ததுடன் அதன் இணை தயாரிப்பாளராகவும் இருந்தார். இது இவரை நாடு முழவதும் அறியச்செய்தது.

**அரசியலில் நுழைவு**

2000ஆம் ஆண்டு சீர்திருத்தக் கட்சி சார்பில் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட மனு செய்துவிட்டு வாக்குப்பதிவுக்கு முன் விலகிக்கொண்டார். யூன் 2015இல் குடியரசு கட்சி சார்பில் அதிபர் பதவிக்கு போட்டியிட போவதாக அறிவித்தார். மே 2016இல் இவரை எதிர்த்த அனைவரும் போட்டியிலிருந்து விலகியதால் யூலை மாதம் குடியரசு கட்சியின் பேரவையில் அதிகாரபூர்வமாக குடியரசு கட்சி வேட்பாளராக இவர் அறிவிக்கப்பட்டார்.

**குடும்பம்**

டொனால்டு டிரம்புக்கு 3 மனைவிகள். முதல் 2 மனைவிகளான இவானா மற்றும் மர்லா மேப்சுள் ஆகியவர்களை விவாகரத்து செய்து விட்ட டிரம்ப், தற்போது 3-வது மனைவியான மெலேனியாவும், டிரம்பு - மெலேனியா இணையருக்குப் பிறந்த பாரன் டிரம்பு என்ற 10 வயது மகனுடன் தனியாக வசித்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் கூறும் கதைகள்.....

பிலிப்பைன்ஸ் நாட்டில் குற்றச் செயல்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளபடியால் அங்குள்ள சிறைக்கூடங்கள் நிரம்பி வழிகின்றன. இதில் ஒரு சிறைக்கூடத்தில் கைதிகள் தூங்கமுடியாமல் திண்டாடுகிறார்கள்..



பிளாஸ்ரிக், றபர், பொலித்தீன், நைலோன் போன்ற பொருட்களை கண்டபடி வெளியே வீசாதீர்கள். அப்படி வீசிய பொருட்களில் சில எவ்வளவு ஆண்டுகள் அழியாமல் கிடந்து மனிதர்களுக்குக் கேடு விளைவிக்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்...

| | | |
|---|---|---|
| நைலோன் | -600 | வருடங்கள் |
| பிளாஸ்ரிக் | -450 | " |
| பம்பஸ் | -450 | " |
| பிளாஸ்ரிக்கப்வகைகள | -50 | " |
| பொலித்தீன் பைகள் | -20 | " |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் செய்திகள் சில...

வட பகுதியில் மதுப்பாவனை 400 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும், 2016ஆம் ஆண்டு ஒரு தனிநபரின் மதுபான பாவனை 5.7 லீற்றராக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 4 லட்சத்துக்கும் அதிகமான தகாத நடத்தைகள்! அதிர்ச்சி தகவல்! நாட்டில் 12000 முதல் 15000 வரையான விபசாரிகள் இருப்பதாக அரசு கூறினாலும் அரச சார்பற்ற அமைப்புகளின் கணிப்பின் பிரகாரம் 4 இலட்சம் விபசாரிகள் இருப்பதாக கூறப்படுகிறது

347 பேரின் உயிருக்கு எமனாக மாறிய ரயில்2016ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதியில் ரயில் விபத்துக்களில் 347 பேர் உயிரிழந்துள்ளனர்

இலங்கையின் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க தனது 83 ஆவது வயதில் 27.12.2016ல் காலமானார். உடல் நிலை பாதிப்பு காரணமாக கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். இவர் 1933ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி பிறந்துள்ளார். தனது 83ஆவது வயதில் காலமாகியுள்ளார். ரத்னசிறி விக்ரமநாயக்க இலங்கையில் 2000 முதல் 2001 வரையும், மீண்டும் மஹிந்த ராஜபக்ஸ ஆட்சிக்காலத்தில் 2005 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியிலும் இலங்கையின் பிரதமராக பதவி வகித்துள்ளார்.

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50,000ஐயும் தாண்டும் என அச்சம்! 2016டிசெம்பர் மற்றும் ஜனவரி ஆகிய மாதங்களில் மழையுடன் கூடிய வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50,000ஐ விடவும் அதிகரிக்கும் அபாயமான சாத்தியக்கூறுகள். சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன், டெங்கு நுளம்பு ஒழிப்பு அவசர நடவடிக்கையின் பொருட்டு, 40 மில்லியன் ரூபாயை, டெங்கு நுளம்பு ஒழிப்புத் தேசிய பிரிவுக்கு உடனடியாக விடுவிக்குமாறு, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சின் செயலாளருக்குக் கட்டளையிட்டுள்ளார். டெங்குக் காய்ச்சல் காரணமாக இவ்வாண்டு 77க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 47 ஆயிரத்து 834 பேர் டெங்குக் காய்ச்சால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6,500 பேர் சேவையிலிருந்து விலகினர் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட மூன்றுமாத காலப்பகுதியில், 6,500 பேர், பொதுமன்னிப்பின் பேரில் சேவையிலிருந்து விலகியுள்ளதாக, இராணுவ ஊடக பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.
2016ஆம் உலகளாவிய இளைஞர் அபிவிருத்திச் சுட்டியில் 183 நாடுகளில் இலங்கை 31ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.பொதுநலவாய நாடுகளின் செயலாளர் அலுவலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவில் வெளியான புள்ளிவிவரத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பொதுநலவாய நாடுகளுக்குள் இலங்கை 7ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு 34 ஆவது பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு அருகில் நிகழ்வுகள் இடம்பெற்றது.

இலங்கையில் இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் மாத்திரம் 2200 பேர் வாகன விபத்தினால் மரணித்துள்ளதாகவும் இவ்வருடத்தில் மாத்திரம் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையை வாட்டும் எயிட்ஸ் : 10 மாதங்களில் மட்டும் 2436 பேர் 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதல் கடந்த 10 மாதக்காலப்பகுதியில் 2436 பேர் எயிட்ஸ் நோயிற்கு ஆளாகியுள்ளனர் எனினும், 2025 ஆம் ஆண்டளவில் நாட்டில் எயிட்ஸ் நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2030 ஆண்டளவில் சர்வதேச அளவில் இந்நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளது என்று எயிட்ஸ் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் டாகடர் ஜீ.வீரசிங்க தெரிவித்தார்.

18ஆயிரம் பேருக்கு அதிகமானவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை! கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியினுள் 18ஆயிரத்து 750 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த ஆண்டுக்கான பாதீட்டுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் எஸ்.பீ நாவின்ன இதனை தெரிவித்துள்ளார்

இலங்கையில் தினமொன்றுக்கு 800 கருக்கலைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக அரச சுகாதாரப்பகுதியினரின் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையின் புதியசெயலாளர்..



1945ம் ஆண்டு உதயமான ஐக்கியநாடுகள் சபையானது பல பொதுச்செயலாளர்களைக் கண்டுவந்துள்ளது. தற்போது அதாவது 01.01.2017 தொடக்கம் புதிய பொதுச்செயலாளர் பதவி ஏற்றுள்ளார். உலகிலுள்ள அரச நிர்வாகசேவைகளில் அதிஉயர் பதவியாகக் கருதப்படும் இப்பதவியில் கடந்த 8 வருடங்களாகப் பதவி வகித்த தென்கொரிய நாட்டவரான பான் கீ மூன் (Ban Ki Moon) இளைப்பாறியதைத் தொடர்ந்து புதிய பொதுச்செயலாளராக போத்துக்கல் நாட்டவரான அன்ரனியோ குற்றறெஸ் (Antonio Guterres) என்பவர் பதவி ஏற்றுள்ளார்.

67 வயதுடைய இவர் 7 வருடங்களாக ஐரோப்பாவிலுள்ள போத்துக்கல் நாட்டின் அரசதலைவராகக் கடமைபுரிந்திருக்கிறார். போத்துக்கல் வசதிபடைத்த நாடல்ல. வேலைவாய்ப்பு, பொருளாதாரம், கல்வி சமூகநலம் போன்ற துறைகளில் வளர்ச்சிபெறாத நாடுதான். இருப்பினும் கடல்,மற்றும் வணிகத்துறைகளில் ஓரளவு வளர்ச்சிபெற்ற நாடாகும் முன்னர் நமது நாடான இலங்கை நாட்டையும் கைப்பற்றி ஆட்சி செய்த நாடென்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

ஆங்கிலம், பிரெஞ், ஸ்பானிஸ், போத்துக்கீஸ் ஆகிய மொழிகளில் பாண்டியத்துவம் பெற்றிருக்கிறார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 2005 தொடக்கம் 2015வரை ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் பிரிவின் தலைவராகப் பதவி வகித்துள்ளார். 12 பெரிய நிர்வாகிகள் இப்பதவிக்குப் போட்டியிட்டனர். இறுதியாக பாதுகாப்புச்சபையில் அங்கம் வகிக்கும் 15 உறுப்பு நாடுகளின் வாக்களிப்பிலேயே இவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஐக்கியநாடுகள் சபையின் தலைமை அலுவலகம் அமெரிக்கா நியூயோர்க்கில் அமைந்துள்ளது. அதன் கிளை நிறுவனங்கள் பல நாடுகளில் இயங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவீஸ் நாட்டிலுள்ள ஜெனீவா நகரில்தான் ஐக்கியநாடுகள் சபையின் பல தாபனங்களின் தலைமை அலுவலகங்கள் அமைந்துள்ளன. உலகம் பூராகவும் இச்சபையில் சுமார் 44.000 பணியாளர்கள் கடமைபுரின்றார்கள். உலகில் நிலவிவரும் சுற்றாடல் சூழல் பாதுகாப்பு, தொற்றுநோய்த்தடுப்பு, இயற்கை அழிவுகள், பசி பட்டினி ஒழிப்பு, உள்நாட்டுப்போர், நாடுகளிடையே போர், அரசியல் குழப்பங்கள் போன்ற இன்னோரன்ன விடையங்களுக்குத் தீர்வுகாணுதலும், அவ்வப்போது மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குதலையும் பிரதான தொழிற்பாடாகக் கொண்டிருக்கின்றது. மக்களின் துன்பங்களைப் போக்கி, மக்கள் அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ வழிவகிக்கின்றது இத்தாபனம். பதவி ஏற்றிருக்கும் புதிய பொதுச்செயலாளரை வரவேற்போம். அவரின் கடமை, நடவடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்ப்போம். இவ்வளவு காலமும் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிவர்களின் பெயர்கள் இங்கே பதிவாகியுள்ளன.

•

1946–1952: Trygve Lie (Norwegen)

1953–1961: Dag Hammarskjöld (Schweden)

1961–1971: Sithu U Thant (Birma)

1972–1981: Kurt Waldheim (Österreich)

1982–1991: Javier Pérez de Cuéllar (Peru)

1992–1996: Boutros Boutros-Ghali (Ägypten)

1997–2006: Kofi Annan (Ghana)

2007-2016 Ban Ki-moon (Republik Korea)

seit 1. Januar 2017: António Guterres (Portugal)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு சொல்லும் வரலாறு!

கிரகரியன் காலண்டரை பின்பற்றும் உலகின் பெரும்பாலான நாடுகளில் புத்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் புழக்கத்தில் இருந்த ரோமானிய கலண்டரில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் என 10 மாதங்கள் ஒரு ஆண்டாக கணக்கிடப்பட்டது.

ஆண்டின் தொடக்க நாளாக மார்ச் 1ம், இறுதி நாளாக ஏப்ரல், 31ம் இருந்தது. கி.மு., 46ல் ரோமானிய தலைவர் ஜூலியஸ் சீசரின் "ஜூலியன் கலண்டர்" அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில் 12 மாதங்கள் சேர்க்கப்பட்டன. ஜனவரி 1 புத்தாண்டாக கடைப்பிடிக்கப்பட்டது.

இருப்பினும் ஐரோப்பாவின் சில நாடுகளில் டிச., 25, மார்ச் 1, மார்ச் 25 என வெவ்வேறு தேதிகளில் புத்தாண்டு கடைப்பிடிக்கப்பட்டது.

பின் "ஜூலியன் கலண்டரில்" உள்ள "லீப் இயர்" கணக்கீடுகளை சரி செய்து செம்மைப் படுத்தினார் ரோமை சேர்ந்த போப் கிரகரி.
1582ல் "கிரகரியன் கலண்டரை" அறிமுகப்படுத்தினார். இதில், ஜூலை, ஆகஸ்ட் சேர்க்கப்பட்டு 12 மாதங்கள் ஒரு ஆண்டு என நிர்ணயிக்கப்பட்டது. ஜனவரி 1 புத்தாண்டாக அறிவிக்கப்பட்டது.இதை பெரும்பாலான கத்தோலிக்க நாடுகள் ஏற்றுக்கொண்டன.

1752 வரை பிரிட்டன் இக்கலண்டரை ஏற்றுக் கொள்ளவில்லை. சில அமெரிக்க குடியேற்ற நாடுகளில் மார்ச் 1 புத்தாண்டாக கடைப்பிடிக்கப் படுகிறது.
சீனா, பாகிஸ்தான், எத்தியோப்பியா உள்ளிட்ட சில நாடுகளில் வேறு தேதிகளில் புத்தாண்டு கடைபிடிக்கப்படுகிறது.


இருப்பினும் உலகில் ஒரு சில நாடுகளை தவிர அனைத்து நாடுகளும் "கிரகரியன் கலண்டரை" அடிப்படையாகக் கொண்டு ஜனவரி 1ம் திகதியை புத்தாண்டாக கொண்டாடுகின்றன






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு டொலருக்கு உணவு உண்ட அமெரிக்க ஜனாதிபதி......



மனிதருக்கு உணவு என்பது எவ்வளவு முக்கியமானது. மனிதன் உயிர் வாழ்வதே இந்த உணவுக்குத்தான். எது இல்லாவிடினும் வாழலாம் ஆனால் ஒரு நாள்முழுவதும் உணவு தண்ணீர் இல்லையாயின் நாம் எவ்வளவு கஸ்டப்படுகிறோம். ஒரு வேளை உணவுக்குப் பிந்திவிட்டாலே மற்றவர்மீது கடிந்து விழுபவர்களும் உண்டு. கணவன்-மனைவி- பிள்ளைகள் என்றால் சிலவேளைகளில் சண்டை சச்சரவுகளிலும் முடிந்துவிடும். இன்னும் சிலர் நோயாளிகள் என்றால் நேரத்திற்கு உணவு கிடைக்கவில்லை என்றால் எவ்வளவு பாடுபடுவார்கள். சிலர் மயக்கம்போட்டு விழுந்தும்விடுவார்கள். இந்த அளவுக்கு உணவின் மகத்துவம் சகல உயிரினங்களுக்கும் அத்தியாவசியமானதாகவே கருதப்படுகின்றது.

"பசி!...ஆம் இது எடுத்துவிட்டால் பத்தும் பறந்துவிடும்" என்று கூறுவார்கள். நாம் உண்ணும் உணவுகளைப் பலர் வீணாகக் குப்பைத் தொட்டிகளில் கொட்டித்தீர்க்கிறார்கள். உலகில் எத்தனையோ லட்சம்பேர் தினமும் பசிபட்டினியால் செத்து மடிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ லட்சம் தொன் நல்ல உணவுகள் வீணாக வெளியே கொட்டித் தீர்க்கப்படுகின்றன. ஏன் நம்மவர்கள் மத்தியிலும் கலியாணம், பூப்புனிதவிழா, பிறந்தநாள் போன்ற குடும்பக் கொண்டாட்டங்களில் எத்தனை தொன் நல்ல உணவுகள் வெளியே கொட்டி வீணடிக்கப்படுகின்றன. ஏன் நமது கோவில்களிலும் பொது வைபவங்களிலும் திருவிழா, பூசை, அன்னதானம் என்று எத்தனை லட்சம் தொன் நல்ல உணவுகள் வெளியே கொட்டப்படுகின்றன நம்மவர்களிடையே இன்னும்தான் சரியான திட்டமிடல், ஒழுங்கான செயற்பாடுகள், கட்டுப்பாடான வாழ்க்கைமுறை, நல்ல நடைமுறைகளைப் பின்பற்றாமை, மிக அதிகமான ஆடம்பரம், கௌரவப் பிரச்சனைகளாலும் இப்படியாக உணவுகள் வீணடிக்கப்பட்டுவருவதை நாம் சிந்திக்கிறோமா..

மகாகவி பாரதி சொன்னான் ”தனி ஒருவனுக்கு உணவு இல்லையானால் இந்த யகத்தினை அழித்துவிடுவோம்” என்ற சீரிய வார்த்தையை நாம் சீர் தூக்கிப் பார்க்கிறோமா?...இல்லவே இல்லை. ஒரு வேளை உணவுக்கு உலகில் எத்தனையோ லட்சம்பேர் தினமும் தவிக்கிறார்கள். பட்டினியால் தினமும் லட்சக்கணக்கானோர் செத்து மடிவதாக ஐக்கியநாடுகள் சபையின் புள்ளிவிபரங்கள் தினமும் எடுத்துக்கூறிக்கொண்டே இருக்கின்றன. இப்பூமிப்பந்தில் இன்னும் லட்சக்கணக்கானோர் பசிபட்டினியால் நோய்வாய்ப்பட்டு தமது வாழ்நாளை பிஞ்சு வயதிலேயே இறந்து முடிந்துபோகும் சோக சம்பவங்களும் நம்மை உறுத்துகின்றனவே. ஆகவே இவ்விடையத்தை நாம் சற்று சிந்திக்கவேண்டும்.

இங்கு...இக்கட்டுரையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சிக்கன உணவுபற்றியே குறிப்பிடுகின்றேன். உலகின் மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி அந்தநாட்டு வரலாற்றில் ஒரு கலப்பு இனத்தவராவர். இவர் சரித்திரத்தில் இடம்பிடித்துக்கொண்டார். இவ்வளவு வசதியான, வளம்மிக்க நாட்டின் தலைவர் என்றால் எவ்வளவு ஆடம்பரமாகச் செலவுசெய்து கோடானகோடி பணத்தைச் செலவு செய்து உல்லாசமாக வாழலாம். இன்றைய உலகில் பல நாடுகளில் பல தலைவர்கள் எவ்வளவு ஆடம்பரமாகச் செலவுசெய்து வாழ்கிறார்கள். ஆனால் ஒபாமா அவர்கள் ஒரு எளிலான மனிதர், எல்லா இன மக்களுடனும் அன்பாகப் பேசிவருபவர், நல்ல திறமைசாலி. நிர்வாகக் கடமைகளில் சிறந்த ஒரு மனிதராக இன்று உலகம் கணித்துக்கொண்டுள்ளது.

ஒபாமா அவர்கள் சில மாதங்களுக்கு முன் ஆசியநாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இப்பிரயாணத்தில் பல வரலாற்றுச் சாதனைகளையும் இவர் பதிவாக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் உலகப் போரின்போது யப்பான்மீது அமெரிக்கப் படைகள் அணுக்குண்டுகளை வீசி லட்சக்கணக்கான யப்பான் மக்களைக் கொன்று அழித்த கொடுமை வரலாறாகும். குண்டு போட்டு அழித்த அந்த இடங்களுக்கு அதிபர் ஒபாமா நேரடி விஜயத்தை மேற்கொண்டு பார்வையிட்டு மிகவும் வேதனையடைந்தார். முதன் முதலாக அமெரிக்கத் தலைவர் ஒருவர் இந்த இடங்களைப் பார்வையிட்டு பொதுமக்களிடம் மன்னிப்புக்கேட்டு அவர் ஆற்றிய உரை ஓர் சரித்திரமாக இடம்பிடித்துக்கொண்டுள்ளது. அணுக்குண்டு பொழிந்து ஏறத்தாள 70 வருடங்களின் பின் அமெரிக்கத் தலைவர் ஒருவரின் நேரடி விஜயமும், ஆற்றிய உரையும் அவரின் புகழை மேலும் ஓங்கச் செய்தன என்றே உலகத்தால் கணிக்கப்பட்டுள்ளது. அடுத்தநாடான வியட்நாம் நாட்டிற்கும் விஜயம் மேற்கொண்டார். அமெரிக்கா - வியட்நாம் யுத்தமும் பல ஆண்டுகள் நீடித்துப் பல லட்சம்பேரை பலிகொண்ட சோக சம்பவங்களும் உலக சரித்திரத்தில் பதிவாகியிருக்கின்றன. இருபது ஆண்டுகளுக்குப் பின் இந்தநாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கத் தலைவராக ஒபாமாவே இடம்பிடித்துள்ளார். வியட்நாம் நாட்டுத்தலைவர் ரைன் டாய் (Tran Dai) அவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி இரு நாட்டு உறவுகளையும் வலுப்படுத்திக்கொண்டார். பல பொருளாதார ஒப்பந்தங்களிலும் இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இதில் காணப்படும் படத்தை நன்கு கவனியுங்கள். வியட்நாமில் அதிபர் ஒபாமா அவர்கள் சாதாரண ஒரு உணவுச்சாலைக்குத் திடீரெனச் சென்று அங்கு உணவருந்திக் கொண்டிருந்த பொதுமக்களுடன் தானும் ஒரு பொதுமகனாக, சாதாரண குடிமகன் போல, சாதாரண கதிரையில் இருந்து பியர் குடித்து, நூடில், பன்றி இறைச்சி, சலட் உணவுகளை உண்டு குடித்து அகமகிழ்ந்திருக்கிறார்..

தனது பாதுகாப்பைக் கவனியாது சாதாரண பொதுமக்களோடு உரையாடி மகிழ்ந்திருக்கிறார். இவ்வளவு பெரிய அமெரிக்க நாட்டின் பெருந்தலைவன் இப்படி எளிமையாகவும் சாதாரணமாகவும் இலகுவாகவும் எல்லோருடனும் பழகி வாழும் பண்பு எந்த நாட்டுத் தலைவருக்கு இல்லாத பண்பு அதிபர் ஒபாமாவுக்கே உரியதாகிவிட்டது. இந்தப் பெருந்தலைவனின் இந்தச் சிக்கன நடவடிக்கையை நாம் பார்க்கும்போது நமக்கு வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் தோன்றவில்லையா!.. இவர் ஒரு நல்ல தலைமைத்துவத்தின் திறனாளி என்றே எடுத்துரைக்கலாம்.

ஆனால் இன்றைய உலகின் பல நாடுகளின் தலைவர்களின் வாழ்க்கை முறைகளைப் பார்த்தாலும் வியப்பாகத்தான் இருக்கும். சுயநலம், ஆடம்பரம், எனப் பலவசதிகளையும் தாம் ஏற்படுத்திக் கோடி கோடியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொட்டிச் செலவழிக்கிறார்கள். ஆடம்பர, போஷாக்கு உணவுகளை அரச நிர்வாகப் பரம்பரைகள் அளவுக்கு அதிகாமாத் திண்டு கொழுக்க, அந்த நாடுகளிலேயே பல லட்சம்பேர் பசிபட்டினியால் செத்து மடிகிறார்கள். சொந்த நாட்டு மக்களைப் பட்டினிபோட்டுப் பரிதவிக்க விட்டுவிட்டுத் தாம் உல்லாசபுரியில் வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் பல நாடுகளில் இன்றும் பொதுமக்களின் வரிப்பணத்தில்தான் அரச நிர்வாக தலைமைகளின் உல்லாசபுரி வாழ்வு தொடர்கின்றனவே..

ஏன் எமது தாய் நாட்டிலும் பல அரச தலைவர்கள் ஆடம்பர உல்லாச வாழ்வுதான். தேர்தல் வந்துவிட்டால் வீடுதேடிப் படை எடுக்கும் தலைவர்கள் தேர்தல் முடிந்ததும் ஏன் என்றும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். பின்பு அடுத்ததேர்தல் வரும்பொழுதுதான் அது செய்வோம்...இது செய்வோம்... எனப் பாசமழைபொழிந்து மக்களை ஏமாற்றுவார்கள். ஏன் நமது தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களோ அல்லது அரசியல்வாதிகளோ நம்ம ஊர் தேநீர் கடைகளிலோ, கள்ளுத்தவறணைகளிலோ,மதுக்கடைகளிலோ அல்லது சாதாரண சாப்பாட்டுக் கடைகளிலோ இருந்து உண்டு குடித்ததை நாம் கண்டிருக்கிறோமா?.. கிடைக்கவே கிடையாது... கௌரவம், அந்தஸ்த்து, மரியாதை, ஆணவம், திமிர், சாதி, மதம் என மூழ்கிக்கிடக்கும் நம்மவர்கள், மெத்தப்படித்த நம் தலைவர்களும் அரசியல் வாதிகளும் அதிபர் ஒபாமாவின் இப்படத்தைப் பார்த்துச் சிந்திக்க வேண்டும்.

அதிபர் ஒபாமாவின் இந்தச் சிக்கன வாழ்க்கை முறையைப் பார்த்து இவர்கள் அதிசயப்பட வேண்டும். ஆனால் நமது நாட்டுத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் சாதாரண குடியானவர்கள் வாழ்வு முறைக்கு இறங்கி வருவார்களா?...வரவே மாட்டார்கள் என்பதுதான் நிஜம். தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அதிபர் ஒபாமாவை மனதார வாழ்த்துவோம். ஆகவே அதிபர் ஒபாமாவின் வாழ்க்கை முறைகளில் ஒரு நல்ல பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் எங்கு?..எப்படி?.. யாரோடு?.. வாழ்ந்தாலும், எப்போதும் எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழப்பழகிக்கொள்ளல் வேண்டும். பிறமனிதருக்குக் கொடுத்து உதவி வாழவேண்டும். அப்போதுதான் நமது வாழ்வு வளம்பெறும். சிறப்படையும். பணம் பொருள் அதிகாரம் போன்ற வசதிகள் நிறைந்துவிட்டால் எல்லாவற்றையும் மறக்கக்கூடாது. சிக்கனமும் எளிமையும்தான் ஒரு மனிதனின் குண இயல்புகளையும் எடைபோடுகின்றது. ஆகவே நாம் எப்போதும் எளிமையான வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து நமக்கும் நாட்டுக்கும் சிறப்பைச் சேர்ப்போம்!.. இதையே வாழ்வின் இலட்சியமாகக் கொள்வோமாக!...

சிவா - ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016ம் ஆண்டில் அன்பளிப்பு 8.210-00 யூரோ தாயகத்துக்கு அனுப்பிய பண விபரம்

மண் சஞ்சிகையால் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் தாயக ஆதரவற்றோர், வலுவிழந்தோர், அகதிகள், முதியோர் நலத்திட்டங்களுக்கு உதவும் பொருட்டு 2016ம் ஆண்டில் நிதியுதவிபுரிந்த அன்பர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்பணம் 8.210-00 யூரோக்களையும் நேரடியாக அந்த இல்லங்களுக்கு அனுப்பி வைத்தோம் என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். இத்திட்டத்திற்கு மேலும் உதவிசெய்ய அன்பு உள்ளங்கள் அனைவரையு கேட்டுக்கோள்வதுடன் உதவிக்கரம் கொடுத்துவரும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அனுப்பிய பணத்தின் விபரம்...

| இல்லத்தின்பெயர் | இடம் | தொகை |
| --- | --- | --- |
| ரூத் மிஷன் | கிளிநொச்சி | 2.290-00 |
| ஒளிரும் இல்லம் | துணுக்காய் | 500-00 |
| வலுவிழந்தோர் வாழ்வகம் | திருநெல்வேலி | 500-00 |
| சிறீசண்முகா பெண்கள் இல்லம் | திருகோணமலை | 960-00 |
| மாணிக்கவாசகர் இல்லம் | மட்டக்களப்பு | 480-00 |
| அன்பகம் | வவுனியா | 680-00 |
| அருளகம் | வவுனியா | 1.920-00 |
| திருஞானசம்பந்தர் இல்லம் | மட்டக்களப்பு | 480-00 |
| யோகசுவாமி இல்லம் | மட்டக்களப்பு | 400-00 |
| மொத்தம் | | 8.210-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா) | - 480-00 யூரோ |
| 02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480-00 யூரோ |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி | - சுவீஸ்லாந்து | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480-00 யூரோ |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன் | - ஜேர்மன் | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 யூரோ |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 06. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 07. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 08. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240-00 யூரோ |
| 11. செல்வி.சுகிர்தா தவராஜ் | - ஜேர்மனி | |
| ((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 100-00 யூரோ |
| 12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200-00 யூரோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 16-11-2016 + 54-66

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி தனபாலசுந்தரம் - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen + 480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற வருடாந்த அன்பளிப்பு)

08. செல்வி தீபா தர்மராசா செல்வி வினிஷா ராஜ்குமார்-Gottingen + 120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் கல்விச்செலவு அன்பளிப்பு

09. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

11. செல்வி லாவண்யா அற்புதராசா - Soest + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

12.செல்வி ஸ்ரெவ்வானி செல்வன்கபிலன்மகாலிங்கம்-Oberhausen + 110-00
(நத்தார்விழா அன்பளிப்பு)

13. திரு.எஸ் சிவலிங்கம்ராஜா - Buende + 30-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)


14.அமரர்கள் வயிரமுத்து-தங்கம்மாவின் பூட்டப்பிள்ளைகள்
(நத்தார் விழா அன்பளிப்பு - London + 150-00
(செல்வன்கள் அகவொழி, அருண், நிதுசன்,
செல்விகள் சபர்ணா, தனுஸ்கா, றொபிற்றா,கவிநிலா,லேயாஅமலா)----------

1494-66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | + 1494-66 |
| அனுப்பியது: - | | |
| 1. அகிலாண்டேஸ்வரி அருளகம் சிறுவர் இல்லம் - வவுனியா | - 960-00 | |
| 2. யோகசுவாமிகள் பெண்கள் இல்லம் சித்தாண்டி-மட்டக்களப்பு- | - 400-00 | |
| வங்கிக்கட்டணம் 2x 35-00 | - 70-00 | |
| | ------- | |
| | - 1430-00 | |
| வங்கிவரி:- (01.11.2016 - 30.011.2016) | - 11-38 | |
| (01.12.2016 - 31.12.2016) | - 11-92 | |
| | ---------- | |
| | - 1453-30 | - 1453-30 |
| | | ---------- |
| - 31-12-2016ல் மீதி கையிருப்பு | | + 41-36 |
| | | ---------- |



**Sri Shanmuga Girls' Home**

No. 628

54, Vidyalayam Road,
Trincomalee. Sri Lanka

Date: 10/11/2016

Received with thanks From Mr. V. Sivarajah

Germany

the sum of Rupees 74,327.00


on account of donation for Home/ Celebration / Building fund by Cash / Cheque

Rs. 74,327.00

Manageress



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

76(54), Vidyalayam Road,
Trincomalee,
Sri Lanka.
026-2222521

026-2222521

Date 10/12/2016.

Miss Y. Nadarajah B.Sc
Manageress & Custodian Trustee.

Attorney-at-Law
Trustee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# .சசிகலாவைப் பற்றி இதுவரை யாரும் அறிந்திராத 1 உண்மைகள்!

கேஸட் கடை விற்பனையாளராக இருந்து ஜெயலலிதாவுடன் நட்பு கொண்டு, அவருக்கு உற்ற தோழியாகி, பின்னர் ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி என அழைக்கப்பட்ட சசிகலா, இப்போது அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர். கட்சியிலும், ஆட்சியிலும் எந்த பொறுப்பும் இதுவரை வகிக்காமல் நேரடியாக பொதுச்செயலாளர் ஆனதன் மூலம் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்துள்ளார் சசிகலா. அவரைப்பற்றிய 10 விஷயங்கள் உங்களுக்கு தெரியுமா?

சசிகலா, ஜெயலலிதாவுக்கு அறிமுகமானது 1984ல். வீடியோ கடை நடத்தி வந்த சசிகலா, அ.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளரான ஜெயலலிதாவின் பிரசாரங்களை வீடியோவாக பதிவு செய்து கொடுக்க ஒப்பந்தமானார். அப்போது தான் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது.

தொடர்ந்து ஜெயலலிதாவுக்கு திரைப்பட கேசட்களை சசிகலா தரத்துவங்க இருவருக்கும் நட்பு அதிகரித்தது. ஜெயலலிதாவுக்கு அரசியல் ரீதியாக சோதனை நிறைந்த கால கட்டத்தில் துணையாக இருந்ததால், நெருக்கம் அதிகரித்து போயஸ் கார்டனிலேயே தங்கினார் சசிகலா.யாரும் நெருங்க முடியாதவர் என சொல்லப்படும் ஜெயலலிதாவுக்கு மிகவும் நெருக்கமானவராக, ஜெயலலிதாவின் நிழலாக வலம் வந்தவர் சசிகலா. தொழில் நிமித்தமாக சந்தித்துக் கொண்டாலும் உற்ற தோழியாகி, உடன் பிறவா சகோதரியாகி 30 ஆண்டுகளுக்கு மேல் ஜெயலலிதாவின் உடனிருந்தவர் சசிகலா. இருமுறை போயஸ் கார்ட்டனை விட்டு வெளியேற்றப்பட்டாலும் அந்தப் பிரிவு சில மாதங்கள் கூட நீடிக்கவில்லை. "நிபந்தனையற்ற அன்பு என்ற ஒன்று இருப்பதாகவே நான் கருதவில்லை. நிபந்தனையற்ற அன்பை நான் இதுவரை சந்தித்திருக்கவில்லை" என ஒரு பேட்டியில் சொன்ன ஜெயலலிதா, அதே பேட்டியின் இறுதியில், "என்னுடன் பிறக்காத சகோதரி சசிகலா. என் அம்மாவின் இடத்தை, நிரப்பிய பெண் அவர்"எனச்சொன்னார். அந்தளவு நெருக்கமானவர் சசிகலா ஜெயலலிதாவுடன் நெருக்கத்தால், சசிகலாவின் கணவர் நடராஜன் உள்ளிட்ட குடும்பத்தினர் பலரும் அ.தி.மு.க.வில் அதிகாரம் செலுத்தத் துவங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலிலும், பல்வேறு தொழில்களிலும் அவர் ஈடுபட்டார். தனக்கு இணையாக ஒரு அரசை சசிகலாவின் குடும்பத்தினர் நடத்துவதாக புகார் சொல்லப்பட 2001, 2011-ம் ஆண்டுகளில் இரு முறை கட்சியில் இருந்து நீக்கப்பட்டு பின்னர் சேர்க்கப்பட்டார் சசிகலா. சசிகலாவுடன் நீக்கப்பட்ட அவரது உறவினர்கள் யாரையும் ஜெயலலிதா சேர்த்துக்கொள்ளவில்லை.

சசிகலாவுடன் ஏற்பட்ட நெருக்கத்தால், சசிகலாவின் அக்கா வனிதாமணியின் மூன்றாவது மகன் சுதாகரனை வளர்ப்பு மகனாக தத்தெடுப்பதாக அறிவித்தார் ஜெயலலிதா. அவரின் திருமணத்தை ஜெயலலிதா பிரம்மாண்டமாக நடத்த அதுவே சர்ச்சையாகி 1996-ம் ஆண்டு தேர்தல் தோல்விக்கு காரணமானது. தனக்கும், ஆட்சிக்கு கெட்டப்பெயர் கிடைக்க சசிகலா குடும்பத்தினரின் அதிகாரமே காரணம் என நினைத்த ஜெயலலிதா, சசிகலாவையும், உறவினர்களையும் வெளியேற்றினார். சுதாகரன் வளர்ப்பு மகன் என்ற அறிவிப்பையும் திரும்ப பெற்றதோடு, பின்னர் தனது ஆட்சியிலேயே போதை பொருள் வழக்கில் சுதாகரனை கைது செய்து சிறையிலும் அடைத்தார். ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுடன் சசிகலா, அவரது உறவினர்கள் சுதாகரன், இளவரசி ஆகியோரும் குற்றஞ்சாட்டப்பட்டனர். இந்த வழக்கில் ஜெயலலிதாவுடன் சசிகலா உள்ளிட்டோருக்கும் 4 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கிலும், டான்சி நில பேர ஊழல் வழக்கிலும் சிறை தண்டனை அனுபவித்தவர் சசிகலா. ஜெயலலிதாவுக்கு மிக நெருக்கமாக இருந்தாலும், கட்சியிலோ, ஆட்சியிலோ சசிகலாவுக்கு பொறுப்பு ஏதும் வழங்கப்படவில்லை. கட்சியிலோ, ஆட்சியிலோ அவர் நேரடியாக அதிகாரம் செலுத்தும் அளவுக்கு பொறுப்பு இல்லாமலே இருந்தார்.

இதுவரை சசிகலா எந்த மேடையிலும் பேசியதில்லை. பேட்டி கொடுத்ததில்லை. ஒரே ஒரு முறை அறிக்கை வெளியிட்டிருக்கிறார். 2011-ம் ஆண்டு ஜெயலலிதா போயஸ் கார்டனை விட்டு வெளியேற்றிய பின்னர், 2012-ம் ஆண்டு ஜெயலலிதாவுக்கு வருத்தம் தெரிவித்து கடிதமும், அதையே பத்திரிகைகளுக்கு அறிக்கையாகவும் வெளியிட்டார் சசிகலா.

சரியாக சொல்ல வேண்டும் என்றால் சசிகலாவின் குரலை கூட மக்கள் கேட்டதில்லை. சொத்துக்குவிப்பு வழக்கு, போயஸ் கார்டனை விட்டு வெளியேற்றம், குடும்ப ஆதிக்க புகார்கள் துவங்கி ஜெயலலிதா மரணம் வரை பல பிரச்னைகளில் அவர் பெயர் கடுமையாக பேசப்பட்டார் மீடியாக்களிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2016ல் உயிரிழந்த சினிமா நட்சத்திரங்கள்கள்...

04.01.2016-பிரதி உஷா
05.01.2016-கல்பனா
28.02.2016-குமரிமுத்து
06.03.2016-கலாபவன்மணி
12.03.2016-செல்வகுமார்
06.06.2016-பாலு ஆனந்த்
06.08.2016-வியட்நாம்வீடு சுந்தர்
09.08.2016-பஞ்சு அருணாசலம்
14.08.2016-கவிஞர் முத்துக்குமார்
27.09.2016-கவிஞர் அண்ணாமலை
22.11.2016-பாலமுரளிகிருஷ்ணா
05.12.2016-ஜெயலலிதா
07.12.2016-சோ ராமசாமி
11.11.2016-சபர்ணா (சின்னத்திரை)
13.03.2016-சாய் பிரசாந்த் (சின்னத்திரை)

## மூன்று அதற்கும் மேலான முறை திருமணம் செய்து கொண்ட பிரபலங்கள்!...

திருமணம் என்பது ஆயிரம் காலத்து பயிர் என்பார்கள். இந்தப் பயிர் அனைவரது வாழ்விலும் சரியாக அறுவடை ஆவது இல்லை. சிலர் சகித்து கொண்டு வாழ்கிறார்கள், சிலர் பிள்ளைகளுக்காக பொறுத்துக் கொண்டு வாழ்கின்றனர். ஆனால், சிலர் தங்கள் வாழ்க்கையை தீர்மானித்துக் கொண்டு, விவாகரத்து செய்துவிட்டு, வேறு திருமணம் செய்துக் கொள்கின்றனர். ஒருவர் இரண்டு திருமணம் செய்துக் கொள்ள கூடாது என்ற சட்டம் வரும் முன்னர் இரண்டு, மூன்று திருமணம் செய்தவர்கள் ஏராளம். இதில், பிரபலங்கள் மட்டும் விதிவிலக்கு அல்ல. கருத்து வேறுபாடு அல்லது வேறு காரணங்களால் மூன்று அல்லது அதற்கும் மேலான முறை திருமணம் செய்துக் கொண்ட கோலிவூட் பிரபலங்கள் பற்றி இனிக் காண்போம்...

ஜெமினிகணேசன்
கமலகாசன்
லட்சுமி
எம் ஜி இராமச்சந்திரன்
யுவன்சங்கர்ராஜா
சாவித்திரி
கலைஞர் கருணாநிதி
ராதிகா சரத்குமார்
சரத்பாபு

## இந்த வருடம் அதிகம் வசூல் செய்த படங்களின் டாப்-10 லிஸ்ட்

கோலிவூட்டில் இந்த வருடம் 200 படங்களுக்கு மேல் ரிலிஸ் ஆகியுள்ளது. கமல், அஜித் படங்களை தவிர மற்ற நடிகர்கள் படங்கள் அனைத்தும் வெளிவந்துள்ளன. இதில் தமிழகத்தின் வசூலில் முதல் 10 இடங்களை பிடித்த படங்களை பார்ப்போம்.

1-கபாலி
2-தெறி
3-ரெமோ
4-ரஜினிமுருகன்
5-இருமுகன்
6-24
7-கொடி
8-அச்சம் என்பது மடமையடா
9-காஷ்மோரா
10-அரண்மனை-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலே மிகப்பெரியவை இவை தான்....

## உலகிலேயே பரப்பளவில் மிகச் பெரிய நாடு எது?

ரஷ்யா இந்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 17,075,200 சதுரக் கிலோமீட்டர் ஆகும். மக்கள்தொகை அடிப்படையில் உலகில் எட்டாவது இடம் வகிக்கிறது.11 விதமான கால வேறுபாடுகளை (Time zone) யும், பரந்த வேறுபட்ட நிலப்பரப்பையும் கொண்டது.
ரஷ்யா உலகிலேயே அதிகமான அளவு காட்டு பகுதியை (8,087,900 ச.கிமீ) கொண்டுள்ளதுடன், இங்குள்ள ஏரிகள் உலக நன்னீர் நிலைகளின் பரப்பளவில் நான்கில் ஒரு பாகமாகவும் உள்ளது.

## உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?

கிறீன்லாந்து ஆர்க்டிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களுக்கிடையில் அமைந்துள்ள தீவு. உலகில் ஒரு கண்டமாகக் கருதப்படாத மிகப் பெரிய தீவு இதுவாகும். இத்தீவின் பரப்பளவு 2,166,086 கிலோமீட்டர்2 ($km^2$) இது உலகிலேயே 13 ஆவது இடத்தில் உள்ள பெரிய நிலப்பரப்பு ஆகும். ஆனால் இப்பெருநிலத்தில் மொத்தம் 55,984 பேரே வாழ்கின்றனர். இது உலக மக்கள் தொகையின் அடிப்படையில் மக்கள்தொகை அடர்த்தி குறைவான நிலப்பரப்பு ஆகும். இது புவியியல் நோக்கில் வட அமெரிக்காவுடன் தொடர்புடைய ஓர் ஆர்ட்டிக் தீவான போதும் வரலாற்று நோக்கிலும் அரசியல் நோக்கிலும் ஐரோப்பாவுடன் தொடர்புடையதாக உள்ளது.

## உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது?

சஹாரா பாலைவனம் ஆப்பிரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய பாலைவனம் ஆகும். இதன் பரப்பளவு 9,000,000 சதுர கிலோமீட்டர்களாகும் (3,500,000 சதுர மைல்கள்). இப்பரப்பானது ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அளவுக்கு பெரியதாகும். இப்பாலைவனம் ஏறத்தாழ 2.5 மில்லியன் ஆண்டுப் பழைமை வாய்ந்தது. அதற்கு முன் இங்கே ஏரிகளும் ஆறுகளும் இருந்தன. இப்பாலைவனம் செங்கடலில் ஆரம்பித்து நடு நிலக் கடற்பகுதி, அத்திலாந்திக்குப் பெருங்கடல் ஆகிய நீர்ப்பரப்புக்களை இணைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகிலே மிகப் பெரிய வளைகுடா எது?

மெக்சிகோ வளைகுடா (Gulf of Mexico) வட அமெரிக்காவின் தென்பகுதியில் அட்லான்டிக் பெருங்கடலுக்கும் கரிபியக் கடலுக்கும் நீட்சியாக ஒரு வளைகுடா ஆகும். 1.6 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவைக் கொண்டது. கிழக்கில் ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடா மாநிலம், மேற்கு டெக்சஸ் மாநிலம் மற்றும் மெக்சிகோ, தென்கிழக்கு கூபா, வடக்கு லூ சியானா, மிசிசிப்பி, அலபாமா, புளோரிடா ஆகிய மாநிலங்கள் அமைந்துள்ளன. இந்த வளைகுடாவில் மிசிசிப்பி, ரியோ கிராண்டே, சாட்டஹூச்சி, மற்றும் வேறு சில ஆறுகள் பாய்கின்றன.

## உலகிலேயே மிகப்பெரிய கண்டம் எது?

உலகின் மிகப்பெரியது ஆசியாக் கண்டமாகும். அதிக மக்கள்தொகை கொண்டதுமான ஒரு கண்டம். பெரும்பாலும் கிழக்கு, வடக்கு ஆகிய அரைக்கோளப் பகுதிகளில் அமைந்துள்ள இது, யுரேசியா நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும். புவி மேற்பரப்பின் 8.7% பரப்பளவு ஆசியாக் கண்டத்தில் உள்ளது. உலக நிலப்பரப்பில் இது 30% ஆகும். 3.9 பில்லியன் மக்கள்தொகையைக் கொண்ட ஆசியாவில், உலகின் மக்களில் ஏறத்தாழ 60 சதவீதம் பேர் வாழ்கின்றனர். 20 ஆம் நூற்றாண்டில் ஆசியாவின் மக்கள்தொகை ஏறத்தாழ நான்கு மடங்காகியது.

## உலகிலேயே மிகப்பெரிய நீர்விழ்ச்சி எது?

ஏஞ்சல் நீர்வீழ்ச்சி உலகில் மிக உயரமான தடையின்றி விழுகின்ற அருவியாகும். வெனிசுலா நாட்டிலுள்ள, கனைமா தேசியப் பூங்காவில் அமைந்துள்ள இந்த அருவி 979 மீட்டர் (3,212 அடி) உயரமானது. இது 807 மீட்டர் (2,648 அடி) தடையின்றி விழுகின்றது. இது சுருன் ஆற்றில் அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 122 ஊடகவியலாளர்களை பலியெடுத்த 2016.....

உலகம் முழுவதும் 2016ம் ஆண்டு 122 ஊடகவியலாளர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 93 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மற்றவர்கள் விபத்துகள், இயற்கைச் சீற்றங்களில் சிக்கி உயிரிழந்தவர்கள் ஆவர். இவர்களில் இந்தியாவில் மட்டும் 5 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டனர்.

உலக தர வரிசையில் ஈராக்கிலேயே, அதிக அளவிலான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

உலக அளவில் 23 நாடுகளில் ஊடகவியலாளர்கள் கொலை, குண்டு வீச்சுத் தாக்குதல், போரின் போது நடந்த தாக்குதல் என குறி வைக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம் தனது ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஆப்பிரிக்கா, ஆசியா பசிபிக், அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, அரபு நாடுகலில் உள்ள 23 நாடுகளில் அதிக அளவில் ஊடகவியலாளர்கள் குறி வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

இருப்பினும் 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் அண்டு ஊடகவியலாளர்கள் கொலைகள் குறைவடைந்துள்ளன. 2015ம் ஆண்டு 112 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இது கடந்த ஆண்டு 93 ஆக குறைந்திருந்தது ஈராக்கிலேயே அதிக ஊடகவியலாளர்கள், 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அடுத்த இடத்தில் ஆப்கானிஸ்தான் 13 கொலைகள், மெக்ஸிகோ 11 கொலைகளுடன் உள்ளன.

ஏமன் நாட்டில் 8 பத்திரிகையாளர்களும், கவுதமாலாவில் 6, சிரியாவில் 6 பேரும் கொல்லப்பட்டனர். இந்தியா, பாகிஸ்தானில் தலா 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொலை தவிர இயற்கை சீற்றம் மற்றும் விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் வரிசையில் அதிகபட்சமாக பிரேசில் நாட்டைச் சேர்ந்த 20 விளையாட்டு செய்தியாளர்கள் கொலம்பியாவில் நடந்த விமான விபத்தில் உயிரிழந்தனர். அதேபோல 9 ரஷ்ய செய்தியாளர்கள் ராணுவ விமான விபத்தில் உயிரிழந்தனர். சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம் 140 நாடுகளைச் சேர்ந்த 6 லட்சம் பத்திரிகையாளர்களை உறுப்பினராகக் கொண்ட அமைப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுத்தத்தால் காணாமல் போனோரின் உறவுகள்
வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம் 08.01.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 181

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



# இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org